Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
THURSDAY, AUGUST 12, 2021

வியாழக்கிழமை ஒகஸ்ட் 12, 2021 | ஒளி: 07 கதிர்: 72 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



# அறிகுறிகள் தென்பட்டால் அலட்சியம் வேண்டாம்

கொரோனா தொற்றின் சிறிய அறிகுறிகள் தென்படும் 2 தொடக்கம் 14 வயது வரையிலான சிறுவர்கள் தொடர்பில் அலட்சியமாக இருந்துவிடவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# சுகாதாரம், கல்வி கைமாறுகிறது

அமைச்சரவையில் வெகு விரைவிலேயே மாற்றமொன்று ஏற்படுத்தப்படுமென தகவல் வெளியாகியுள்ளது. வெளிவிவகார அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு உள்ளிட்ட முக்கிய சில அமைச்சுகளில் மாற்றத்தைக் கொண்டுவர, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரும்பம் கொண்டுள்ளார்.

தொடர்ச்சி P2



# ‘இது ஆபத்தான மாதம்’

இந்த மாதம் மிகவும் ஆபத்தானது என்றும் கொரோனா மரணங்கள் 48.8 சதவீதம் அதிகரித்துள்ளன என்றும் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

கொரோனா தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கையும் 30 சதவீதம் அதிகரித்துள்ளது என்ற அவர், நாட்டின் அபாயங்களை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

# பல துறைகளின் மீதும் 2022 பட்ஜெட்டில் கண்

## பொதுஜன பின்வரிசை எம்.பிக்களும் யோசனைகளை வழங்கினர்



தேசிய பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் வகையிலும் பல துறைகளையும் மேம்படுத்தும் நோக்கிலுமான 2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தை தயாரிப்பதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

அதனோர் அங்கமாக, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அலரிமாளிகையில், நேற்று (11) பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றது. நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவினால், இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

தொடர்ச்சி P2



# ‘பாதி மூளை நிர்வாகம் பயங்கரமானது’

மூளை பகுதியளவில் மரணித்துள்ள அதிகாரிகளால் நாடு நிர்வகிக்கப்பட்டால் ஏற்படும் சவால்களை நாட்டு மக்களே எதிர்கொள்ள நேரிடும் எனத் தெரிவித்த ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி, தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் விசேட வைத்திய நிபுணர்களின் கருத்துகளுக்கு உரிய தரப்பினர் செவிசாய்க்க வேண்டும். இல்லாவிடின் பாரிய விளைவுகள் ஏற்படும் என்றார்.

தொடர்ச்சி P2


# ‘பயிற்சி பெற்ற படையினரே தடுப்பூசியை ஏற்றுகின்றனர்’

நன்கு பயிற்றுவிக்கப்பட்ட இராணுவத்தினரே கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன (ஓய்வு) தெரிவித்தார்.

ஒரு சிலர் கூறுவது போன்று, எவ்விதப் பயிற்சிகளையும் பெற்றுக்

தொடர்ச்சி P2





# ‘மார்பர்க்’ எனும் புதிய வைரஸ் கண்டுபிடிப்பு

மேற்கு ஆப்பிரிக்கா கினியாவில் “மார்பர்க்” என்னும் புதிய கொடிய வைரஸ் கண்டறியப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. எபோலா, கொவிட் - 19 போன்று இதுவும் விலங்கிலிருந்து மனிதர்களுக்குப் பரவும் தன்மை கொண்டது.

தொடர்ச்சி P2

# தம்மிக்க ‘பாணி’யின் உரிமம் இரத்து



தம்மிக்க பண்டாரவின் தயாரிப்புக்கு மருந்துவ பாணமாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளபோதும், கொரோனா எதிர்ப்பு மருந்தாக அங்கீகாரம் வழங்கப்படவில்லை என, ஆயுர்வேத ஆணையாளர் ஏற்கெனவே தெரிவித்திருந்தார்.

எனினும், அந்தப் பாணிக்கு வழங்கப்பட்டிருந்த தற்காலிக உரிமை, உடன் அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என ஆயுர்வேத ஆணையாளர், நேற்று (11) அறிவித்தார்.

கொரோனா வைரஸ் அலையின் போது, ஒரு வகையான பாணியை தயாரித்திருந்த தம்மிக்க பண்டார, அப்பாணியைப் பருகினால், கொரோனா தொற்றுவதைத் தடுக்கலாமென பிரசாரங்களை மேற்கொண்டிருந்தார்.

தொடர்ச்சி P2

# எம்.பிக்களுக்கு மீண்டும் அன்டிஜன் பரிசோதனை

பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற பணியாட் தொகுதியைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு எழுமாற்றமாக ரெபிட் அன்டிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

தொடர்ச்சி P2

கொரோனாவால்

# தாயும் சேயும் மரணம்

க. அகரன், எம். றொசாந்த்



வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த பெண் ஒருவர், கொரோனா தொற்றால், நேற்று (11) உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2



# பி.சி.ஆர், 6,500 ரூபாய்; அன்டிஜன் 2,500 ரூபாய்

தனியார் வைத்தியசாலைகள் மற்றும் வைத்திய பரிசோதனை நிலையங்களில் முன்னெடுக்கப்படும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மற்றும் ரெபிட் அன்டிஜன் பரிசோதனைகளை நடத்துவதற்கு ஆகக்கூடிய விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய பி.சி.ஆர் பரிசோதனைக்கு 6,500 ரூபாயும், ரெபிட் அன்டிஜன் பரிசோதனைக்கு 2,500 ரூபாயும் ஆகக்கூடிய கட்டணமாக அறிவிடப்படும்.

இதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல், இன்று (12) வெளியாகும் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

# ஒரு நிமிட தாமதமும் உயிர்களைக் குடிக்கும்

அடுத்த 20 நாள்களுக்குள் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டால் குறைந்தது 1,200 மேலதிக மரணங்களைத் தடுக்க முடியும் என்று ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சமூக வைத்திய பேராசிரியர் சுனேத் அகம்பொடி வலியுறுத்தினார்.

அவர் தனது டுவிட்டர் பக்கத்திலேயே மேற்குறிப்பிட்ட செய்தியை வெளியிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# பாலாமை இறைச்சி வியாபாரி கைது



கனகராசா சரவணன்

சட்டவிரோதமாக ஆமை இறைச்சி விற்பனையில் ஈடுபட்ட அக்கரைப்பற்று கண்ணகிபுரத்தைச் சேர்ந்த ஒருவரை, பொலிஸார் கைது செய்துள்ளதுடன், அவரிடமிருந்து 16 பால் ஆமைகளையும் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர், அக்கரைப்பற்று வாவியில் இருந்து ஆமைகளைப் பிடித்து மோட்டார் சைக்கிளில் கண்ணகிபுரத்துக்கு எடுத்துச் சென்ற போதே, பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையின்போது, அக்கரைப்பற்று வாவியில் இருந்து ஆமைகளைப் பிடித்து இறைச்சியாக்கி, அதனை அம்பாறை நகரிலுள்ள உணவகங்களுக்கு நீண்ட காலமாக அவர் விற்பனை செய்து வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

யானைகளின் பாதுகாப்புக்கு

# ‘ஓர் அரசாங்கமாக முன்நின்றோம்’

யானைகளின் பாதுகாப்புக்காக ஓர் அரசாங்கமாக நாம் எப்போதும் முன்நின்றோம் எனவும் அவற்றின் பாதுகாப்புக்காக பாரிய சேவையாற்றியுள்ளோம் எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச யானைகள் பாதுகாப்பு தினத்தையொட்டி, (ஆக.12) அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே, பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும், ‘அற்புதமான விலங்குகளின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பில் தேடி அறிவதற்கு சிறந்த காலம்’ என்பதே சர்வதேச யானைகள் பாதுகாப்பு தினத்தின் தொனிப்பொருளாகும்.

தொடர்ச்சி P2

# மஸ்கெலியா சிசு மரணம்

செதி பெருமாள்

மஸ்கெலியா சுகாதார அத்தியட்சகர் பிரிவிலுள்ள காட்மோர் தோட்டத்தைச் சேர்ந்த தம்பதிக்கு பிறந்த சிசு, கொரோனா தொற்றுக்கு உள்ளான நிலையில் மரணமடைந்துள்ளது.

பிரசவத்துக்காக அப்பெண், டிக்கோயா-கிளங்கன் மகப்பேற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அதன்பின்னர், அப்பெண்ணுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதியானது.

அப்பெண்ணின் கணவனுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலும் கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டது. இவ்விருவரும் ஒரே வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## சுகாதாரம், கல்வி கைமாறுகிறது

கல்வி, சுற்றுலா, மின்சக்தி மற்றும் ஊடகம் உள்ளிட்ட அமைச்சுகளிலும் மாற்றம் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கொரோனா மரணங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், சுகாதார அமைச்சு, அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியிடம் இருந்து கைமாற்றப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

சுகாதார அமைச்சர் என்ற ரீதியில், கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலுக்கு தீர்வு காண, சுகாதார அமைச்சு உட்பட சுகாதாரத் துறையை வழிநடத்த பவித்ரா வன்னியாராச்சி தவறியுள்ளார் என அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், தற்போதைய அமைச்சரவையில் இருந்து சுகாதார அமைச்சராகத் தகுதியான ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும், இதன்படி, புதிய சுகாதார அமைச்சராக ரமேஷ் பத்திரண நியமிக்கப்படுவார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

அத்துடன், தற்போதைய கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், வெளிவிவகாரங்களுக்கான அமைச்சராகவும் வெளிவிவகாரங்களுக்கான அமைச்சராகவுள்ள தினேஷ் குணவர்தன, உயர் கல்வி அமைச்சராகவும் மாற்றப்படவுள்ளனர்.

மேலும், அமைச்சர் ரமேஷ் பத்திரண வசமுள்ள பெருந்தோட்ட கைத்தொழில், தற்போது ஊடகத்துறை அமைச்சராகவுள்ள கெஹெலிய ரம்புக்வெல்லவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

அதேநேரம், தற்போது மின்சக்தி அமைச்சராகவுள்ள டலஸ் அழகப்பெருமவுக்கு ஊடக அமைச்சு வழங்கப்பட உள்ளது.

தற்போதைய சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியிடம் மின்சக்தி அமைச்சும், சுற்றுலா அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிடம் கல்வியமைச்சும் கைமாறவுள்ளன.

இந்த அமைச்சரவை மாற்றம் இன்னும் ஓரிரு நாள்களில் நடைபெறுமென, ஆங்கில பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## 'பாதி மூளை நிர்வாகம் பயங்கரமானது'

காலியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர், "கொவிட் தொற்றாளர்கள் குறைந்தளவு அடையாளப்படுத்தப்பட்ட போது நாடு முழுமையாக முடக்கப்பட்டது. சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் கடுமையான முறையில் பின்பற்றப்பட்டன. இதனால் அப்போது நெருக்கடிகளை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்ய முடிந்தது" என்றார்.

> **தொற்றாளர்களின் எண்ணிக்கையும் மரணிப்பவர்களின் எண்ணிக்கையும் தினசரி அதிகரித்த வண்ணம் உள்ள நாட்டைக் குறைந்தபட்சம் இரண்ட வார காலத்துக்காவது முடக்க வேண்டுமென விசேட வைத்தியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இக்கோரிக்கைக்கு உரிய தரப்பினர் செவிசாய்க்க வேண்டும். இல்லாவிழன் நாடு பாரிய விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்**

"ஆனால், தற்போது நாட்டில் கொவிட் தொற்றுப் பரவல் தீவிரமடைந்துள்ளது. தொற்றாளர்களின் எண்ணிக்கையும், தொற்றால் மரணிப்பவர்களின் எண்ணிக்கையும் தினசரி மரணிப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்த வண்ணம் உள்ளன" என்றார்.

"இவ்வாறான நெருக்கடியான சூழ்நிலையில் நாடு முழுமையாக திறக்கப்பட்டு, அனைத்து அரச மற்றும் தனியார் ஊழியர்களும் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள். பொதுப் போக்குவரத்துச் சேவைகளும் முழுமையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனவே, நாட்டைக் குறைந்தபட்சம் இரண்ட வார காலத்துக்காவது முடக்க வேண்டுமென விசேட வைத்தியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இக்கோரிக்கைக்கு உரிய தரப்பினர் செவிசாய்க்க வேண்டும். இல்லாவிடின் நாடு பாரிய விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்றார்.

# 'இது ஆபத்தான மாதம்'

அவசரத் தேவைக்காக அன்றி, வீட்டை விட்டு வெளியேற வேண்டாம் என்றும் மக்களை அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த மாதம் மிகவும் ஆபத்தானது என்றும், கொரோனா ஒழிப்புக்கான ஒரே தீர்வு நோய் பரவாமல் தடுப்பதே என்றும் அவர் கூறினார்.

அரசாங்கமோ அல்லது எவரும் சட்ட நடவடிக்கைக்காக காத்திருக்காமல் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்று கூறிய அவர், தேவையற்ற பயணங்களை நிறுத்துமாறு, மக்களிடம் கோரிக்கை விடுத்தார்.

"உங்கள் குடும்பத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு உங்கள் கையில் இருக்கிறது," என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## 'பயிற்சி பெற்ற படையினரே தடுப்பூசியை ஏற்றுகின்றனர்'

கொள்ளாத இராணுவத்தினரை தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையில் இணைத்துக் கொள்ளவில்லை எனவும் இராணுவத்தின் மருத்துவப் பிரிவில் பயிற்சி பெற்றவர்களே இவ்வாறு தடுப்பூசி செலுத்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், "எவ்வளவு சிறந்த செயற்பாடுகளைச் செய்தாலும் அதனைத் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கும் நபர்களும் நம் சமூதாயத்தில் உள்ளனர்.

"தடுப்பூசி செலுத்தத் தெரியாதவர்கள் கூட தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என சிலர் விமர்ச்சித்துள்ளனர்.

"நாங்கள் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைக்கு ஆயுதப் படையணிகளை பயன்படுத்தவில்லை என்பதை பாதுகாப்புச் செயலாளர் என்ற ரீதியில் பொறுப்புடன் கூறுகின்றேன்.

"அதற்காக சிறந்த மருத்துவப் பயிற்சி பெற்ற மருத்துவப் படையணியையே நாங்கள் பயன்படுத்துகின்றோம். நிலைமையை சுகாதாரத் தரப்பினரால் தனியாக முகாமைத்துவம் செய்ய முடியாத நிலையிலே, நாட்டு மக்களின் உயிர்களைக் காப்பதற்காகாக இராணுவம் இவ்வாறு முன்வந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது" என்றார்.

## எம்.பிக்களுக்கு மீண்டும் அன்டிஜன் பரிசோதனை

இந்தப் பரிசோதனைகள், எதிர்வரும் 17ஆம் திகதியன்று காலை 9 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரையிலும் முன்னெடுக்கப்படும் என படைக்கல சேவிதர் நரேந்திர பெர்ணான்டோ தெரிவித்தார்.

"தொற்றாளர்கள் இனங்காணப்படும் பிரதேசங்களிலிருந்து வருகைதரும் அதிகரிகளுக்கு மீண்டும் அன்டிஜன் பரிசோதனைகளை முன்னெடுப்பது நல்லதென, சுகாதாரப் பிரிவினர் பரிந்துரை செய்துள்ளனர்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

> **சுகாதாரப் பிரிவினரால் பாராளுமன்ற பிரதானிக்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு அமைய, பாராளுமன்றத்துக்கு வருகைதரும் அனைவரது பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் நோக்கிலேயே, இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது**

கொரோனா வைரஸ் நிலைமை தொடர்பில் சுகாதாரப் பிரிவினரால் பாராளுமன்ற பிரதானிக்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு அமைய, பாராளுமன்றத்துக்கு வருகைதரும் அனைவரது பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் நோக்கிலேயே, இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்றார்.

பாராளுமன்றத்தில், சுகாதார அமைச்சுடன் இணைந்து ஆறாவது தடவையாக கொரோனா பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் இருபதுக்கும் மேற்பட்டவர்கள், பணியாட்தொகுதியைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலானோர், கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை கடந்த காலத்தில் உறுதிப்படுத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 'மார்பர்க்' எனும் புதிய வைரஸ் கண்டுபிடிப்பு

வௌவால்களில் இருந்து பரவும் மார்பர்க் வைரஸ் நோயின் இறப்பு வீதம் 88 ஆகும். தெற்கு குக்கெடோ மாகாணத்தில் மார்பர்க் வைரஸ் நோய் காரணமாக இறந்த நோயாளியின் மாதிரிகள் கடந்த 2ஆம் திகதி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதனூடாகவே இறப்பு வீதம் குறித்த தகவல் கண்டறியப்பட்டதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து உலக சுகாதார அமைப்பின் ஆப்பிரிக்காவுக்கான பிராந்திய இயக்குநர் மத்ஷிடிசோ மொய்தி கூறுகையில்,

"மார்பர்க் வைரஸ் நோய், மிக வேகமாக பரவும் தன்மை கொண்டது. எனவே, அதன் பரவலைக் கண்டறிந்து தடுக்க வேண்டும். எபோலா வைரஸைத் தடுக்கும் வகையில் மேற்கொண்ட நடவடிக்கைகளால் கிடைத்த அனுபவங்களைக் கொண்டு புதிய வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த சுகாதார அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறோம்" என்றார்.

ஆப்பிரிக்காவிலிருந்து பரவத் தொடங்கிய எபோலா வைரஸ் நோய் காரணமாக கடந்தாண்டு 12 பேர் உயிரிழந்தனர். எபோலா முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டு விட்டது என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ள நிலையில், புதிய வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது.

தேசிய, பிராந்திய அளவில் மட்டுமே இது பெரும் அச்சுறுத்தலைத் தருகிறது என்றும் உலகளவில் இந்த வைரஸ் நோயின் தாக்கம் குறைவு என்றும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. பொதுவாக, குகைகள் அல்லது சுரங்கங்கள், குடியிருப்புக் காலணிகள் ஆகியவற்றில் இருக்கும் வௌவால்களிலிருந்து மார்பர்க் வைரஸ் நோய் பரவுகிறது. மனிதர்களுக்கு பரவும் பட்சத்தில், பாதிக்கப்பட்டவர்களின் உடலிருந்து வெளியேறும் வியர்வையிலிருந்து இது மற்றவர்களுக்கு பரவுகிறது எனவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

## தாயும் சேயும் மரணம்

அப்பெண் பிரவசத்துக்காக வவுனியா வைத்தியசாலையில் அண்மையில் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு சிசேரியன் மூலம் சிசு பிறந்துள்ளது. ஆயினும், சில நாள்களின் பின்னர் சிசு உயிரிழந்தது.

இதையடுத்து, தாய்க்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி. ஆர் பரிசோதனையில், கொரோனா தொற்றியிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து, வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும், சிகிச்சை பலனின்றி அவரும் நேற்று உயிரிழந்துள்ளார்.

## 'ஓர் அரசாங்கமாக முன்னின்றோம்'

"காட்டு யானைகளின் பாதுகாப்பு மற்றும் நிர்வாகத்துக்கான நேர்மறையான தீர்வாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு படைப்பாற்றல் மிக்க அறிவை பரப்புதல் என்பது சர்வதேச யானைகள் தினத்தின் குறிக்கோளும் பணியுமாகும்.

"பழங்காலத்திலிருந்தே இலங்கை கலாசாரத்தை உலகுக்கு உணர்த்தும் கலாசார நிகழ்வான பெரஹர போன்ற நிகழ்வுகளின் மூலம் இந்த மரியாதைக்குரிய விலங்கு, இலங்கை சுற்றுலாத்துறைக்கு அளித்த சேவை மகத்தானது.

"வேட்டையாடுதல், வாழ்விட இழப்பு, மனித- யானை மோதல் போன்றன ஆபிரிக்க மற்றும் ஆசிய யானைகளுக்கு பல அச்சுறுத்தல்களாகும். காட்டு யானைகளுக்கு சிறந்த பாதுகாப்பை வழங்குதல், சட்டவிரோத வேட்டை மற்றும் யானை தந்த வர்த்தகத்தை தடுக்க சட்ட அமுலாக்க கொள்கைகளை மேம்படுத்துதல், யானைகளின் வாழ்விடங்களை பாதுகாத்தல், பிடித்துக்கப்பட்ட யானைகளுக்கு சிறந்த பாதுகாப்பை வழங்குதல் மற்றும் பாதுகாக்கப்பட்ட

> **அதிகளவில் பேசப்படும் மற்றும் மக்களை சிரமத்துக்கு உட்படுத்தும் யானை – மனித மோதலை தீர்ப்பதற்கு தற்போதைய அரசாங்கம் பல நடவழக்கைகளை முன்னெடுத்துள்ளதுடன், யானைகள் அழியும் அபாயத்தில் இருக்கும் இந்நேரத்தில், யானைகளைப் பாதுகாப்பது நமது அனைவரின் பொறுப்பு**

சரணாலயங்களுக்கு திருப்பி அனுப்புதல் என்பன யானைகள் பாதுகாப்பின் நோக்கமாகும்.

"உலகெங்கிலும் உள்ள யானைகள் பாதுகாப்பு அமைப்புகளும் இதில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றன.

"இலங்கையில் அதிகளவில் பேசப்படும் மற்றும் மக்களை சிரமத்துக்கு உட்படுத்தும் யானை - மனித மோதலை தீர்ப்பதற்கு தற்போதைய அரசாங்கம் இதுவரை பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதுடன், யானைகள் அழியும் அபாயத்தில் இருக்கும் இந்நேரத்தில், யானைகளைப் பாதுகாப்பது ஓர் அரசாங்கமாக நம் அனைவரின் பொறுப்பாகும்" எனத் தெரிவித்துள்ளார்.



## அறிகுறிகள் தென்பட்டால் அலட்சியம் வேண்டாம்

சிறுவர்களுக்கும் நேற்று (11) முதல் வீட்டு சிகிச்சை முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர்கள் வைத்தியசாலையின் குழந்தை நல வைத்தியர் டொக்டர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ரிட்ஜ்வே வைத்தியசாலையில் கொரோனா சிகிச்சைக்கு முன்னுரிமை அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறுவர்களுக்கு வீட்டில் சிகிச்சை அளிக்கும் போது, வயது வந்த ஒருவர் சிறுவர்களை கவனித்துக்கொள்ள எப்போதும் இருக்க வேண்டும் என்றும் தொலைபேசி மூலம் சிகிச்சை பரிந்துரைக்கப்படுவதால் தேவையான வசதிகளை வழங்க பராமரிப்பாளர்கள் தயாராக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

கொரோனா தொற்றுக்குள்ளான சிறுவர்களுக்கு வீட்டிலேயே சிகிச்சை அளிப்பது தொடர்பில் விசாரிக்க 1390 என்ற அவசர இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை அவசியம் வைத்தியசாலைகளில் அனுமதிக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

தொற்றுக்குள்ளான 150 சிறுவர்கள், கொழும்பு லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் கடந்த வாரம் அனுமதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பல துறைகளின் மீதும் 2022 பட்ஜெட்டில் கண்

கிராம, பிரதேச மற்றும் மாவட்ட மட்டங்களில் நிறைவேற்ற வேண்டிய விடயங்கள், தேசிய மட்டத்தில் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் மற்றும் தேசிய பொருளாதாரத்தைப் பலப்படுத்துதல் போன்ற துறைகள் தொடர்பில் பின்வரிசை உறுப்பினர்களின் முன்மொழிவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன என பிரதமர் ஊடகப்பிரிவு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் சேதன விவசாயத்தை ஊக்குவித்தல், ஏற்றுமதி உற்பத்தியை அதிகரித்தல், தொழில்துறை மற்றும் சேவைத் துறையில் கிராமப்புற சமூகத்தின் பங்களிப்பு மற்றும் பாரம்பரிய தொழில்முனைவோரை மேம்படுத்துதல், சுற்றுலாத் துறையை மேம்படுத்துதல், மீன்வளத் துறையை விரிவுபடுத்துதல், மலர் மற்றும் அலங்கார இலை வளர்ப்பாளர்கள், விலங்கு உற்பத்தி துறை ஆகியவற்றை மேம்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், பின்வரிசை உறுப்பினர் இதன்போது முன்மொழிவுகளை முன்வைத்தனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நிதி அமைச்சராக சேவையாற்றிய காலப்பகுதியில் பல துறைகளில் இருந்தும் ஆலோசனைகளை பெற்று, வரவு- செலவுத் திட்டத்தை தயாரித்தார் எனத் தெரிவித்த நிதியமைச்ச பெசில் ராஜபக்ஷ, அத்திட்டங்கள் வெற்றிகரமான முன்னேற்றத்தை வெளிப்படுத்தின. ஆதால், பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் முன்மொழிவுகளை பெற்றுக்கொள்ளப்படவுள்ளன என்றார்.

## தம்மிக்க 'பாணி'யின் உரிமம் இரத்து

கேகாலையைச் சேர்ந்த நாட்டு மருத்துவரான தம்மிக்க பண்டார, தனது கனவில் வந்த காளியம்மனே, இந்தப் பாணி மருந்தைத் தயாரிக்குமாறு கூறியதாகத் தெரிவித்திருந்தார்.

தம்மிக்க பண்டார தயாரித்த இந்தப் பாணத்தை, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன ஆகியோரும், ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் பருகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், தம்மிக்க பண்டாரவின் தயாரிப்புக்கு மருத்துவ பாணமாக அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளபோதும், கொரோனா எதிர்ப்பு மருந்தாக அங்கிகாரம் வழங்கப்படவில்லை என, ஆயுர்வேத ஆணையாளர் தெரிவித்திருந்தமை தெரிந்ததே!

## ஒரு நிமிட தாமதமும் உயிர்களைக் குடிக்கும்

முடிவெடுப்பதற்கு ஐந்து நாள்கள் தாமதித்தாலும் குறைந்தது 700 பேரின் உயிர் காவு கொள்ளப்படும் என்று குறிப்பிட்டார்.

இலங்கை கொவிட் கணிப்பு மாதிரியின் அடிப்படையில் இந்த தகவலை பேராசிரியர் அகம்பொடி வெளியிட்டுள்ளார். ஆகையால் தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடங்களும் பேராபத்தை விளைவிப்பனவையாகவே அமையும் என்பதில் ஐயமில்லை.

## மஸ்கெலியா சிசு மரணம்

இந்நிலையில், அப்பெண், ஆண் சிசுவொன்றை பிரசவித்துள்ளார். அச்சிசு இறந்துவிட்டது. அச்சிசுவுக்குச் செய்த பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது என சுகாதார அதிகாரி நரேந்திர குமார் தெரிவித்தார் .

அசாத் சாலியின் மனு:

## நீதியரசர் விலகினார்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள, தன்னை விடுதலை செய்ய வேண்டுமென மேல்மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி,



உயர்நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனு மீதான பரிசீலனையில் இருந்து உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டி நவாஸ் விலகியுள்ளார்.

உயர்நீதிமன்ற நீதியரசர்களான முர்து பெர்னாண்டோ, எஸ். துரைராசா, ஏ.எச்.எம். டி நவாஸ் ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (10) பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே இந்த மனு மீதான பரசீலனையில் இருந்து தான் தனிப்பட்டக் காரணங்களுக்காக விலகுவதாக மன்றத்துக்கு அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து இந்த மனு, இம்மாதம் 27ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதற்கு உயர்நீதிமன்றம் தீர்மானித்தது.

## விமான நிலையத்தில் கொரோனா பரிசோதனை

விமான நிலைய வளாகத்தில் வெளிநாட்டு பணியாளர்களுக்காக, எழுமாறாக கொரோனா பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் அடுத்தவாரம் மேற்கொள்ளப்படவுள்ளன என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பி, மீண்டும் வெளிநாடுகளுக்கு பணிக்கு செல்ல உள்ளவர்களுக்கு ஏற்பட்டுள்ள தடையை நிவர்த்தி செய்யும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## செந்திலுக்கு வியாழேந்திரன் வாழ்த்து






பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமானுக்கு பல நாடுகளின் உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்பட்டு *World Book of Records* விருது கிடைத்திருப்பது, இலங்கை வாழ் தமிழர்கள் என்ற ரீதியில் அனைவரும் பெருமைப்பட வேண்டுமென இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

உலகத்தரம் வாய்ந்த சர்வதேச சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களில், *World Book of Records* முதன்மை நிறுவனமாக இருப்பதாகவும், ஆசியா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் பல்வேறு சாதனையாளர்களுக்கு விருது வழங்கி சாதனைகளை கௌரவித்து வருவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை செந்தில் தொண்டமான், கொரோனா வைரஸ் தொற்றுக் காலத்தில் மக்களோடு மக்களாக சிறப்பாகச் செயற்பாடுகளை முன்னெடுத்ததாகவும், இதன்காரணமாக சமூக சேவையாளராக செயற்பட்டமைக்கான *World Book of Records* விருதுக்கு அவர் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இரு டோஸ்களையும் செலுத்தி கொண்டோரில்

# ‘23 பேரை கொரோனா கொன்றது’

### மரணங்களை மறைப்பதில்லை எனவும் விளக்கம்

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி இதுவரையில் உயிரிழந்தோரில், 23 பேர் கொரோனா தடுப்பூசிகளில் இரண்டு டோஸையும் செலுத்திக்கொண்டவர்கள் எனத் தெரிவித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன, கொரோனா மரணங்கள் மறைக்கப்படுவதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களையும் மறுத்துள்ளார்.



உயிரிழந்த 23 பேரில் பெரும்பான்மையானோருக்கு சிறுநீரகப் நோய் உள்ளிட்ட ஏனைய நோய்களால் நீண்ட காலம் பாதிக்கப்பட்டிருந்தனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களில் 200 பேர், தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டுவர்கள். இதில் 173 பேர் ஒரு டோஸை மாத்திரம் பெற்றவர்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸுக்கான இரு தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வோர் தொற்றுக்குள்ளாகி உயிரிழப்பது மிகவும் குறைவாகக் காணப்படுவதாகவும், தொற்றுக்குள்ளாகி உயிரிழந்த 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 80 சதவீதமானோர் தடுப்பூசிகளை பெறாதவர்கள் என்றார்.

இதனால், கொரோனா வைரஸுக்கான தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வது முக்கியமானது. 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவரும் அருகில் உள்ள தடுப்பூசி செலுத்தும் நிலையங்களுக்குச் சென்று விரைவாக தடுப்பூசிகளை செலுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

கொரோனா வைரஸ் மரணங்களை சுகாதாரத் தரப்பினர் மறைப்பதாக சிலர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களையும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல குணவர்தன மறுத்துள்ளார்.

தெளிவில்லாத பயணத்தால்

# ‘இரண்டையும் இழக்க நேரிடும்’

### அரசாங்கத்துக்கு ஹர்ஷ எச்சரிக்கை

பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கான பாதையில் பயணிக்கும்போது மக்கள் உயிரிழப்பார்கள் என்றால், இறுதியில் பொருளாதாரம், மக்கள் என இரண்டையும் இழக்க நேரிடுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷடி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் அரசியல் இலக்கை நோக்கிப் பயணிக்காது, தயவு செய்து இறுக்கமான மனநிலையில் இருந்து மாறி யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு, தற்போது பயணிக்கும் பாதையை மக்களுக்காக மாற்றிக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.



ஒரு பக்கம் பொருளாதார நெருக்கடிளுக்கு நாடு முகங்கொடுத்து வரும் அதேவேளை, மறுபக்கம் நாட்டில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருகிறது. வைத்தியசாலைகளில் இவ்வாறு உயிரிழப்புகள் ஏற்படுவதை இதற்கு முன்னர் தான் ஒருபோதும் பார்த்ததில்லை என்றார்.

டெல்டா வைரஸ் வேகமாகப் பரவினாலும் நாட்டை முடக்கப்போவதில்லை என்கிற மனநிலையில் அரசாங்கம் உள்ளதாகவும் தெரிவித்தார்.



யாழில்

## வீட்டை நிர்மாணித்து கையளித்தது இராணுவம்

சமூர்த்தி அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட வீடு, யாழ்ப்பாணம், மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த ஜோதி ரூபினி துஷாந்தன் என்பவருக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் 55ஆவது படைப்பிரிவின் 553ஆவது பிரிகேடின் 10ஆவது விஜயபாகு காலாட் படையினரால் இந்த வீடு நிர்மாணிக்கப்பட்டுள்ளதோடு, இம்மாதம் 09ஆம் திகதி இராணுவத்தினரால் இது திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது பயனாளிக்கு உலர் உணவுப் பொதிகள், வீட்டு உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

## பாராளுமன்ற மருந்தகத்துக்குப் பூட்டு

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல்களால் பாராளுமன்றத்தில் உள்ள மருந்தகம் தற்காலிகமாக மூடப்பட்டஉள்ளது.

பாராளுமன்ற வைத்தியரின் உறவினர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அந்த வைத்தியர் வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். வைத்தியர் உள்ளிட்ட அங்கு பணியாற்றிய ஏனைய ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட ரெபிட் அன்டிஜன் பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்று அவர்களுக்கு இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, அங்கு நேற்று முன்தினம் (10) தொற்று நீக்கி தெளிக்கப்பட்டதோடு, மருந்தகத்தை விரைவில் மீள திறப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## பொதுப் போக்குவரத்து முடங்காது

> பயணிகள் அத்தியாவசிய சேவைக்காக மாத்திரம் பயன்படுத்து கின்றார்களா என்பது இனி பாதுகாப்பு தரப்பினரால் கண்காணிக்கப்படும். பொதுப் போக்குவரத்து சேவையும் வைரஸ் பரவலடைவதற்கு ஒரு காரணியாக உள்ளது

பொது போக்குவரத்து சேவையை முழுமையாக முடக்கும் தீர்மானம் இதுவரையில் எடுக்கப்படவில்லை என தெரிவித்த போக்குவரத்து மற்றும் சமுதாய பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, பயணிகள் அத்தியாவசிய சேவைக்காக மாத்திரம் பயன்படுத்து கின்றார்களா என்பது இனி பாதுகாப்பு தரப்பினரால் கண்காணிக்கப்படும் என்றார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (11) இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

பொதுப் போக்குவரத்து சேவையும் கொவிட் -19 வைரஸ் பரவலடைவதற்கு ஒரு காரணியாக உள்ளது என சுகாதார தரப்பினர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ஆகவே, பொது மக்கள் அநாவசிய தேவைக்காக பொது போக்குவரத்து சேவையினை பயன்படுத்துவதை தற்காலிகமாக தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றார். இலங்கை போக்குவரத்து சபையின் பல்வேறு சேவையாளர்களில் 285 பேர் கொவிட்-19 தொற்றுக்குள்ளாகியுள்ளார்கள். இவர்களுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை முதல் களுத்துறையில் உள்ள சாரதி கல்லூரியில் சிகிச்சையளிக்கப்படும்.

தற்போது நெருக்கடியான நிலை ஏற்பட்டுள்ளது என்பதை அனைத்து தரப்பினரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றினைந்து செயற்பட்டால் மாத்திரமே தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையை வெற்றிக் கொள்ள முடியும்.

கொவிட்-19 ஒழிப்பு செயலணி ஸ்தாபிக்கப்படாமல் இருந்திருந்தால் நாடு பாரிய விளைவுகளை எதிர் கொள்ள நேரிட்டிருக்கும். இச்செயலணியின் பிரதானியான இராணுவ தளபதி உள்ளதால்தான் எதிர் தரப்பினர் பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். சுகாதார தரப்பினர் எடுக்கும் தீர்மானங்களை செயலணி புறக்கணிக்கவில்லை. சுகாதார தரப்பினரது ஆலோசனைகளுக்கு அமையவே தீர்மானங்கள் முன்னெடுக்கப்பட்டு அவை செயற்படு த்தப்படுகின்றன என்றார்.

கொரோனாவால்

## தவிசாளர் உயிரிழப்பு

■ எம்.றொசாந்த், எஸ். நிதர்ஷன், எஸ் தில்லைநாதன்

வல்வெட்டித்துறை நகர சபை தவிசாளர் கோணலிங்கம் கருணானந்தராசா (வயது 76) கொரோனா தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் உடல்நிலை பாதிக்கப்பட்ட அவருக்கு, பொதுச் சுகாதார பரிசோதகரால் நேற்று முன்தினம் (10) முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையில், கொரோனா தொற்று உறுதியானது.

அதனை அடுத்து, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, கடந்த 31ஆம் திகதி நகர சபை தவிசாளர் பதவியில் இருந்து விலகுவதாக அவர் அறிவித்த போதும், தமிழரசுக் கட்சியால் அதற்கான கோரிக்கை நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



> கடந்த 31ஆம் திகதி நகர சபை தவிசாளர் பதவியில் இருந்து விலகுவதாக அவர் அறிவித்த போதும், தமிழரசுக் கட்சியால் அதற்கான கோரிக்கை நிராகரிக்கப்பட்டது

## ரஷ்ய பிரஜை ரத்கமயில் கைது

விசா இன்றி 7 வருடங்களாக நாட்டில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்த ரஷ்ய பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என ரத்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பூஸ்ஸ கெந்தல புதிய வீதியிலுள்ள வீடொன்றில் வாடகைக்கு தங்கியிருந்த 50 வயதுடைய ரஷ்ய பிரஜையே கைது செய்யப்பட்டுள்ளார். அந்த வீட்டின் உரிமையாளருக்கு அவர், கடந்த 9 மாதங்களாக வாடகைப் பணத்தையும் செலுத்தவில்லை எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீட்டு வாடகை செலுத்தப்படாமை தொடர்பில் ரத்கம பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், 2014ஆம் ஆண்டு முதல் விசா இன்றி ரஷ்ய பிரஜை நாட்டில் தங்கியிருந்துள்ளமை தெரியவந்துள்ளது.



கிணற்றில் இருந்து

## யுவதியின் சடலம் மீட்பு

■ கே. அகரன்

வவுனியா, ஆச்சிபுரம் பகுதியில், கிணற்றில் இருந்து 19 வயது யுவதி ஒருவர், நேற்று (11) காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அதே பகுதியைச் சேர்ந்த மோகன் திலக்ஷனா என்ற யுவதியே, இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர், நேற்று முன்தினம் (10) இரவு, தனது வீட்டில் உறங்கச் சென்றுள்ளார். எனினும், நேற்று (11) காலை அருகில் உள்ள கிணற்றில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மட்டக்களப்பு மாநகர சபையின்

# பொதுமக்களுக்கான சேவைகள் இடைநிறுத்தம்

எம்.எஸ்.எம்.நூர்தீன்




மட்டக்களப்பு மாநகர சபையின் பொதுமக்களுக்கான அனைத்துச் சேவைகளையும், தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக மாநகர ஆணையாளர் எம்.தயாபரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (10) மட்டக்களப்பு மாநகர சபை ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் பலருக்கு கொரோனாத் தொற்று இனங்காணப்பட்டதை அடுத்தே, பொதுமக்களின் நலன் கருதி இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், பொதுமக்கள் தங்களது அத்தியாவசியத் தேவைகள் நிமித்தம் 065 22 22 275 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# செயலமர்வுக்குள் புகுந்தது கொரோனா

கனகராசா சரவணன்




மட்டக்களப்பு, சத்துருக்கொண்டானில், கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், கடந்த 2ஆம் திகதி திணைக்களத்தின் கள உத்தியோகத்தர்களுக்கான 5 நாள்கள் கொண்ட செயலமர்வொன்று நடைபெற்றது.

சர்வோதயா தொண்டர் நிறுவன மண்டபத்தில் நடைபெற்ற இச்செயலமர்வில் 168 பேர் கலந்துகொண்டதாகவும், இதனை கிழக்கு மாகாண ஆளுநர் ஆரம்பித்துவைத்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இச்செயலமர்வின் இறுதி நாளின்போது அங்கு சென்ற பொதுச் சுகாதார அதிகாரிகள் மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையில் சிலருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது.

மேலும், இவர்களில் சிலருக்கு தமது வீடுகளுக்குச் சென்ற பின்னர் காய்ச்சல் ஏற்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், இச்செயலமர்வில் கலந்துகொண்ட சுமார் 70 பேர் தத்தமது வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.







# 70 குடும்பங்களுக்கு உலருணவுகள் வழங்கல்

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

கொரோனாத் தொற்றுப் பரவலால் பாதிக்கப்பட்ட 70 குடும்பங்களுக்கு, தலா இரண்டாயிரம் ரூபாய் பெறுமதியான உலருணவு நிவாரணப் பொதிகள், இலங்கை தேசிய சமாதானப் பேரவையால் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக அப்பேரவையின் மாவட்ட சர்வமதக் குழு இணைப்பாளர் ஆர். மனோகரன் தெரிவித்தார்.

இவ் உலருணவுப் பொதிகள், மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்கு நேற்றைய தினம் (11) வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இப்பேரவையால் ஏறாவூர் நகர சபைக்கும் தொற்று நீக்கி தெளிப்புக் கருவியும், பாதுகாப்பு அங்கிகளும் நேற்றைய தினம் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவம்:

# தடுப்பூசி அட்டை அவசியம்

எம்.றொசாந்த்

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்துக்கு வருபவர்கள் தடுப்பூசி போடப்பட்ட அட்டைகளை வைத்திருப்பது அவசியமாகுமென, யாழ். மாநகர சபை அறிவுறுத்தியுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவ நடைமுறைகள் தொடர்பாக யாழ். மாநகர மேயர் வி. மணிவண்ணன் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே, இவ்வாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல்களில் நடைமுறைகளில் மாற்றங்கள் பற்றி அடியார்களுக்கு அவ்வப்போது அறிவிக்கப்படுமென அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

குழந்தைகளும் சிறுவர்களும் வயோதிபர்களும் கோவிலுக்கு வருவதை முற்றாகத் தவிர்க்க வேண்டும்.

கொவிட் - 19 நோய் அறிகுறிகள் உள்ளவர்கள், வீதித் தடையில் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

கோவிலுக்குள் அனுமதிக்கப்படும் வேளையில் அடியார்கள் முழுமையாக நடைமுறைகளை பின்பற்றுவதோடு, தடுப்பூசி போடப்பட்ட அட்டைகளை வைத்திருப்பதும் அவசியமாகும்.

கோவிலுக்கு அனுமதிக்கப்படும் வேளையில், ஆண் அடியார்கள் வேட்டியுடனும் பெண்கள் கலாசார உடைகளுடனும் வருதல் வேண்டும்.

சுகாதார நடைமுறைகளுக்கேற்ப அடியார்கள் கோவிலுக்குள் வரையறுக்கப்பட்ட அளவில் அனுமதிக்கப்படும் பட்சத்தில் தேவஸ்தானத்தின் அறிவுறுத்தல்களின் படி, அவர்கள் கோவில் வளாகத்தினுள் தரித்து நிற்கவோ அமர்ந்திருக்கவோ அனுமதிக்கப்படமாட்டார்கள்.

அடியவர்கள், கோவிலுக்கு அனுமதிக்கப்படும் சந்தர்ப்பத்தில் சகல அடியவர்களும் முத்திரைச் சந்தியிலிருந்து, பருத்தித்துறை வீதியால் மாத்திரமே கோவிலுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

கோவிலுக்கு வந்து சேரும் ஏனைய மூன்று வீதிகளும் அடியவர்கள் செல்வதற்கு முழுமையாகத் தடை செய்யப்படும்.

வீதித்தடைக்கு உள்ளே நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட மக்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள், நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் மாநகர சபையின் அனுமதி அட்டையுடன் ஏனைய வீதித்தடைகளினூடாகச் சென்று வர அனுமதிக்கப்படுவர்.

தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் அங்கப்பிரதட்சணம் செய்தல், அடி அழித்தல், கற்பூரச்சட்டி எடுத்தல், காவடி, தூக்குக்காவடி எடுத்தல் போன்ற நேர்த்திக் கடன்கள் மேற்கொள்ளுதல், தாகசாந்தி, அன்னதானம் வழங்கல் போன்றவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

கோவில் சூழலிலும் கோவிலை அண்டியுள்ள பகுதிகளிலும் அடியார்கள், பொதுமக்கள் கூடுவதற்கான தெய்வீக சொற்பொழிவுகள், தெய்வீக இசை அரங்குகள், நிகழ்வுகள், களியாட்ட நிகழ்வுகள், வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன என்றும், அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வாள் வெட்டு; ஒருவர் கைது

எஸ். நிதர்ஷன்

யாழ்ப்பாணம், அளவெட்டி, நாகினாவத்தை பகுதியில் வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஒருவர், தெல்லிப்பழை பொலிஸாரால் நேற்று முன்தினம் (11) இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் பிரிவுகளில் பல வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய நபரே, இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என, பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 2 வாள்கள் மற்றும் சந்தேகநபரால் கொள்ளையிடப்பட்ட இலக்க தகடற்ற இரண்டு மோட்டார் சைக்கிள்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.



முழுமையான கல்வி

# முல்லைத்தீவுக்கு இல்லை

நடராசா கிருஸ்ணகுமார்



நிகழ்நிலை வகுப்புகளால் மாணவர்கள் முழுமையான கல்வியை பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்புகள் முல்லைத்தீவில் இல்லை என, முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் இ.தமிழ்மாறன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு கல்வி வலயத்தின் நிலைவரம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்தரைத்த அவர், முல்லைத்தீவு கல்வி வலயத்தில் 66 பாடசாலைகள் இயங்குகின்றன எனவும் அவற்றில் 22,000 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர் என்றும் கூறினார்.

கல்வி, பிற பாட விதானச் செயற்பாடுகளில் கடந்த காலங்களில் நல்ல பெறுபேறுகளை முல்லைத்தீவு கல்வி வலயம் வெளிப்படுத்தி வந்திருப்பதாகவும், அவர் தெரிவித்தார்.

கொரோனா அச்சுறுத்தலுக்குப் பின்னர் பாடசாலைகள் மூடப்பட்டு, மாணவர்கள் தற்போது நிகழ்நிலை வகுப்புகளில் கல்வி கற்று வருகின்றனர். எமது வலயத்தில் 40 சதவீதமான மாணவர்களுக்குத்தான் நிகழ்நிலை வகுப்புகளில் கற்கக் கூடிய வாய்ப்புகள் உள்ளன.

ஏனைய மாணவர்களுக்கு நிகழ்நிலை வகுப்புகளில் பங்கு கொள்வதற்கான வாய்ப்புகள் இல்லாத நிலைமை காணப்படுகின்றது. இது ஒரு பாதிப்பையே கல்வி கற்றலில் மாணவர்களிடையே ஏற்படுத்தி உள்ளது. தற்போதைய சூழல் மாறும்போதுதான் மாணவர்கள் எல்லோரும் ஒரே நிலையில் கல்வி கற்கக் கூடிய வாய்ப்புகள் உருவாகும் எனவும், அவர் தெரிவித்தார்.



வருடாந்த

# மகோற்சவம் நடைபெறாது

வி.சுகிர்தகுமார்

நாட்டின் கொரோனா தொற்று நிலை காரணமாக, அம்பாறை, ஆலையடிவேம்பு ஸ்ரீ முருகன் கோவில் வருடாந்த மகோற்சவம் இம்முறை நடைபெறாது என கோவிலின் தலைவர் ஆர்.ஜெகநாதன் தெரிவித்தார்.

எனினும், விசேட அபிசேக பூஜைகள் மாத்திரம் நடைபெறும் எனவும் இதில் கலந்துகொள்ள பக்தர்களுக்கு அனுமதி வழங்கப்படாது எனவும் அவர் தெரிவித்தார்.

வருடாந்த மகோற்சவம் தொடர்பாக நேற்று முன்தினம் (10) நடைபெற்ற கோவில் நிர்வாக சபைக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் மேலும் கூறினார்.




காத்தான்குடியில்

# தலைதூக்கியுள்ள போதைப்பொருள்

எம்.எஸ்.எம்.நூர்தீன்

காத்தான்குடி பொலிஸ் பிரிவில் கடந்த ஜுலை மாதத்தில் மாத்திரம் 41 பேர் ஐஸ், ஹெரோய்ன் போதைப்பொருள்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இம்மாதம் இதுவரைக்குமான காலப்பகுதியில் 10 பேர் இக்குற்றச்சாட்டில் சந்தேகநபர்களாக கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் போதைப்பொருள் விற்பனையாளர்களும் அடங்குவதாகக் காத்தான்குடி பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சக உத்தியோகத்தரை தாக்கிய பொலிஸ் அதிகாரி

செ.கீதாஞ்சன்

**“முல்லைத்தீவு, மல்லாவி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மீது பொலிஸ் நிலைய அதிகாரி தாக்குதல் நடத்தியுள்ளார்.இதன்போது பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்**

முல்லைத்தீவு, மல்லாவி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மீது பொலிஸ் நிலைய அதிகாரி தாக்குதல் நடத்தியுள்ளார்.

இச்சம்பவம், நேற்று முன்தினம் (10) இடம்பெற்றுள்ளது.

இதன்போது பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

கடமை நிமித்தம் மல்லாவி பொலிஸ் நிலைய அதிகாரி அங்குள்ள உத்தியோகத்தர் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக, விசாரணையில் தெரியவந்துள்ளது.





# தோப்பாகும் தனி வீடுகள்

## கொட்டகலையில் அவலம்

■ கே.சுந்தரலிங்கம்

தனிமரம் தோப்பாகும் என்பார்கள். ஆனால், மலையகத்தில் கட்டப்பட்ட தனி வீடுகள், தோப்புக்குள் ஒளிந்துகொள்ளும் நிலைமையே ஏற்பட்டுள்ளது. அவ்வாறான வீடுகள் அமைக்கப்பட்ட பகுதிகள், காடாகின்றன.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில், மனிதவள அபிவிருத்தி நிறுவனத்தின் ஊடாக கொட்டகலை, ஸ்டோனிகிளிப் பகுதியில் கட்டப்பட்ட தனி வீடுகள், பயனாளிகளிடம் ஒப்படைக்கப்படாமையால் அவை காடுகளாக மாறுவதாக பயனாளிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஏழு பேர்ச்சஸ் காணியில் தலா 1 மில்லியன் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 25 தனி வீடுகளே இதுவரை எவருக்கும் பெற்றுக்கொடுக்கப்படவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரு வருட காலமாக பராமரிப்பின்றி பாழடைந்து போய் உள்ள குறித்த 25 தனி வீடுகளும் தொடர்ந்து பயனாளிகளுக்கு வழங்கத் தாமதமாகினால், மீண்டும் பண விரயம் செய்து புனரமைப்புச் செய்ய வேண்டிவரும் என்றும் பயனாளிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில் இன்று பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தற்காலிகக் கொட்டில்களிலும் பழைமை வாய்ந்த மிகவும் ஆபத்தான தொடர்குடியிருப்புக்களிலும் வாழும் நிலையில், பொதுமக்களின் வரிப்பணத்தில் இவ்வாறு சகல வசதிகளுடன் கட்டப்பட்ட இப்புதிய வீடுகள் இன்று எவருக்கும் பயன்படாதிருப்பது மிகவும் வேதனைக்குரியது என பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேசவாசிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

### வீட்டு வேலைத் தொழிலாளர்களின்

# உரிமைகளை உறுதிப்படுத்தவும்

■ மொஹமட் ஆஸிக்




நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் வீடுகளில் பணிபுரியும் தொழிலாளர்களது உரிமைகள் உறுதிப்படுத்த வேண்டுமென, வீட்டு வேலைத் தொழிலாளர் சங்கத்தின் தலைவி சத்தியவாணி சரசகோபால் வேண்டுகோள் விடுத்தார்.

கண்டியின் அச்சங்கத்தின் தலைமையகத்தில் நேற்று (11) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, இது குறித்து அவர் வலியுறுத்தினார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

வீட்டு வேலைத் தொழிலாளர்களது உரிமைகள் மற்றும் அவர்களின் பிரச்சினைகள் குறித்து கடந்த 14 வருடங்களாக தமது சங்கம் போராடிய போதும், டயகம சிறுமியின் மரணத்தின் பின்பே பலர் கண் திறந்துள்ளனர் என்றார்.

“எமக்கு உரிய காலத்தில் போதியளவு தொழில் பாதுகாப்புக் கிடைத்திருந்தால், அச்சிறுமியின் மரணம் சம்பவத்திருக்காது. எனவே எமது வீட்டு வேலைத்தொழிலாளர்களின் உரிமைகள் உறுதிப்படுத்த வேண்டும்” எனத் தெரிவித்த அவர், இது தொடர்பில் தொழில் அமைச்சர் நிமல் ஸ்ரீபால சில்வாவுடன் நேற்று முன்தினம் (10) கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றதுடன், இதன்போது, தமது தொழில் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பிக்க அமைச்சரால் உறுதியளிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

### எழுத்து மூலம் தீர்வு வழங்கினாலேயே

# போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி

■ ஆ.ரமேஸ்



ஆசிரியர், அதிபர்களின் சம்பள முரண்பாட்டுக்கு, எதிர்வரும் வரவு -செலவுத் திட்டத்தின் ஊடாக தீர்வைப் பெற்றுதருவதாக அரசாங்கம் அறிவித்தாலும் இதனை எழுத்து மூலம் உறுதிப்படுத்தினால் மாத்திரமே, ஆசிரியர்களின் போராட்டம் நிறைவுபெறும் வாய்ப்பு உள்ளதென, தேசிய ஜனநாயக ஆசிரியர் சங்க செயலாளர் எஸ். பாலசேகரம் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று (11)காலை நடைபெற்ற ஊடக சந்திப்பு ஒன்றிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவித்த அவர், கடந்த 24 வருடங்களுக்கு மேலாக இந்தப் பிரச்சினையை தொடர்பான எமது கோரிக்கைகளை அரசாங்கம் செவிமெடுத்துள்ள போதிலும் நிலையானதும், எழுத்து வடிவிலான உத்தரவாதமோ வழங்காது, கடந்த காலங்களை போல வாய்மூலமான உத்தரவாதத்தை வழங்குகின்றனர்.

இவ்வாறு வழங்கப்படும் உத்தரவாங்களால் போராட்டத்தில் குதிக்க நேரிட்டுள்ளது.

எனவே, எமது சம்பள முரண்பாட்டு பிரச்சினையைத் தீர்க்க அரசு எடுக்கும் தீர்மானத்தை அல்லது உத்தரவாதத்தை எழுத்து வடிவில் தந்துவிட்டால், தொடர் போராட்டங்களை நிறுத்திக்கொள்ள வாய்ப்பு ஏற்படும் என எமது சங்கம் அரசாங்கத்தை வலியுறுத்துகிறது என்றார்.

### வழக்கு விசாரணையை துரிதப்படுத்தி

# வெகு விரைவில் தண்டனை வழங்கவும்

## புரடொக்ட் சங்கம் வேண்டுகோள்

■ சுதத்.எச்.எம்.ஹேவா




பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் வீட்டில், வேலை செய்த நிலையில், தீக்காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்த டயகம சிறுமியின் மரணம் தொடர்பில், முன்னெடுக்கப்படும் விசாரணைகளை விரைவுபடுத்தி, குற்றத்துடன் தொடர்புடையவர்களுக்கு விரைவில் தண்டனை வழங்கப்பட வேண்டும் என, புரடொக்ட் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இச்சங்கத்தின் ஊடகவியலாளர் சந்திப்பொன்று, ஹட்டனில் நேற்று (11) நடைபெற்றதுடன், இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அந்த சங்கத்தின் லக்ஸபான பிரதேச ஒருங்கிணைப்பாளர் தனுஸா தில்ருக்ஸி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

டயகம சிறுமியின் மரண விசாரணைகள் மிகவும் மந்த கதியில் இடம்பெறுவதாகவும், இது தொடர்பில் தமது சங்கம் மிகுந்த அவதானத்துடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், சம்பவத்தை மூடி மறைப்பதற்கு பல விடயங்கள் முன்னெடுக்கப்படுவதாக தகவல்கள் கிடைப்பதாகத் தெரிவித்த அவர், எனவே, இந்த வழக்கை துரிதப்படுத்தி, இதனுடன் தொடர்புடையவர்களுக்கு தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இன்று வரை பெருந்தோட்டங்களில் உள்ள சில தரகர்கள், தோட்டங்களைச் சேர்ந்த சிறுவர்களை, போலி வயதைக் காட்டி, பல இடங்களில் தொழில்களில் அமர்த்தியுள்ளமை பாரிய பிரச்சினை என்றும், எனவே வீட்டு வேலைகளுக்குச் செல்பவர்கள் வசிக்கும் கிராம உத்தியோகத்தர்களின் உறுதிப்படுத்தல் சான்றிதழ்களைப் பெறும் நடைமுறையொன்றை ஏற்படுத்துவது அவசியம் என்றார்.

# தகனச்சாலைகள் இரண்டும் தற்காலிகமாக பூட்டப்பட்டன

■ அஜித்லால் சாந்தஉதய

இரத்தினபுரி மாநகர சபைக்குரிய 2 தகனச்சாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன என, இரத்தினபுரி மாநகர சபையின் நகராதிபதி டிரோன் அத்தனாயக்க தெரிவித்துள்ளார்.

திருத்த வேலைகள் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளதால், அவற்றை மூடியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த தகனச்சாலைகளில் 150 சடலங்கள் தகனம் செய்ததன் பின்னர், தகனச்சாலைகளில திருத்த வேலைகள் செய்ய வேண்டும் என்றும் எனினும், கடந்த சில தினங்களாக நாளொன்றுக்கு 8- 10 சடலங்கள் தகனம் செய்யப்படுகின்றன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

> **“ தகனச்சாலைகளில் 150 சடலங்கள் தகனம் செய்ததன் பின்னர், திருத்த வேலைகள் செய்ய வேண்டும். எனினும், கடந்த சில தினங்களாக நாளொன்றுக்கு 8- 10 சடலங்கள் தகனம் செய்யப்படுகின்றன. இதுவரை 700க்கு அண்மித்த சடலங்கள் தகனம் செய்யப்பட்டுள்ளன**

கடந்தமுறை பராமரிப்பு பணிகள் நிறைவுற்றதும் இதுவரை 700க்கு அண்மித்த சடலங்கள் தகனம் செய்யப்பட்டுள்ளன. குறித்த 2 தகனச்சாலைகளையும் திருத்தம் செய்யும் அவசியம் ஏற்பட்டுள்ளதால் அவற்றின் பணிகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### வேலைக்கு

# சிறார்களை அமர்த்தினால் கடும் நடவடிக்கை

■ கே.சுந்தரலிங்கம், துவாரகஷின்



18 வயதுக்குக் குறைந்த சிறுவர்களை, வீடுகளுக்கோ அல்லது கடைகளுக்கோ வேலைக்கு அனுப்பிவைக்கும் பெற்றோருக்கு எதிராகவும், அவர்களை வேலைக்கு அமர்த்துகின்றவர்களுக்கு எதிராகவும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுப்பதென கொட்டகலை பிரதேச சபையில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கொட்டகலை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு, தவிசாளர் ராஜமணி பிரசாத் தலைமையில் நேற்று முன்தினம் (10) நடைபெற்ற போதே, இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் பிள்ளைகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டியது பிரதேச சபையின் கடமையாகும். எனவே, சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவோருக்கு எதிராகவும், அதற்கு உடந்தையாக இருப்போருக்கு எதிராகவும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க கொட்டகலை பிரதேச சபை ஏற்பாடுகளைச் செய்துள்ளதென தவிசாளர் இராஜமணி பிரசாத் தெரிவித்தார்.

இதேவேளை, கொமர்சல் பிரதேசத்தை அண்டியுள்ள பிள்ளைகள் கல்வி கற்பதற்கு வசதியாக ஆரம்பப் பாடசாலை ஒன்றை அமைப்பதற்கு மத்திய மாகாண ஆளுநர் அனுமதி வழங்கியுள்ளார். விரைவில் பணிகள் ஆரம்பமாகவுள்ளன எனவும் தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

# போராட்டம் கைவிடப்பட்டது

■ ஏ.ஏ.எம்.பாயிஸ்

பலாங்கொடை அரச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிக்கும் ஏனைய பணியாளர்களுக்கும் இடையே தொடரும் முரண்பாடுகள் காரணமாக, இவ்வைத்தியசாலையின் பணியாளர்களால் நேற்று முன்தினம் (10) பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த வைத்திய அதிகாரியின் செயற்பாடுகள் காரணமாக, வைத்தியசாலையில் தொற்று அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தே, பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களுடன் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட கலந்துரையாடியதையடுத்து இவர்கள் மீண்டும் கடமைக்குத் திரும்பினர்.

> **“ வைத்திய அதிகாரியின் செயற்பாடுகள் காரணமாக, வைத்தியசாலையில் தொற்று அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தே, பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்**

அத்துடன், சம்பந்தப்பட்ட வைத்திய அதிகாரியை இடமாற்றம் செய்வதற்கு, பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலே பொட நடவடிக்கை எடுத்ததையடுத்து, பணியாளர்கள் கடமைக்குத் திரும்பினர்.











# ஆடிப்பூரம்...

மலையகத்தின் பல இடங்களிலுமுள்ள அம்மன் கோவில்கள், ஆடிப்பூர பெருவிழா நேற்று (11) இடம்பெற்று, அம்பாளுக்கு பாலாபிஷேகம் நடைபெற்றது. இதற்கமைய, தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் கோவில், பதுளை- ரொக்கில் அருள்மிகு காளியம்மன் கோவில் ஆகிய கோவில்களில் அம்பாளுக்கு பாலாபிஷேகம், பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. ( எம். செல்வராஜா, கே.சுந்தரலிங்கம், துவாரகஷின்)

# நுகர்வோரின் அடிவயிற்றை சுரண்டவிடாது உரிமைகளைப் பாதுகாக்கவும்

வீட்டைவிட்டு வெளியேறக்கூடாது என்றோர் அறிவிப்பு விடுக்கப்பட்டதன் பின்னர், பலரும் வீடுகளுக்குள்ளேயே முடக்கிக் கொண்டிருக்கின்றனர். கொரோனா மரணங்கள், தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க, பொதுவெளியில் மக்களின் நடமாட்டம் கொஞ்சம் கொஞ்சமாக, குறைந்துகொண்டே வருகின்றது.

ஆக, இறுதி அஸ்திரமான ஊரடங்குச் சட்டத்தை அரசாங்கம் கையிலெடுப்பதற்கு முன்னரே, மக்கள் ஓரளவுக்கு மனம் திருந்தி வருகின்றமையை அவதானிக்க முடிகிறது. பெரும்பாலான இடங்களில் கூட்டம் கூட்டமாகக் கூடியிருப்பதையும் பிரதான வீதிகளில் கூட்டமாக நடந்து திரிவதையும் அவதானித்திருப்போம். அப்படியாயின் அவர்கள் அநாவசியமாக சுற்றித்திரிகின்றனர்.

ஏனெனில், அத்தியாவசிய தேவையாயின் அவசரமாகச் சென்று, அவசரமாக வீடுகளுக்குள் திரும்பிவிடுவர். 'அத்தியாவசியம்', 'அநாவசியம்' ஆகிய இரண்டு பதங்களுக்கும் பலரும் அர்த்தம் தேடிக்கொண்டிருக்கின்றனர். ஒருவருக்கு அநாவசியமானது, மற்றொருவருக்கு அத்தியாவசியமாக இருக்கும்.

இவ்வாறிருக்கையில், அத்தியாவசிய பொருள்களின் விலைகள், நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இரவு மூடப்படும் கடையொன்று, மறுநாள் திறக்கப்படும் போது ஒவ்வொரு பொருளின் விலையுட் 5 ரூபாய், 10 ரூபாயால் அதிகரித்திருக்கிறது.

கொரோனாவுக்கு அஞ்சி வீடுகளுக்குள்ளே முடங்கியிருக்கும் நேரத்தில், பெருமுதலைகள் நுகர்வோரின் அடிவயிற்றை சுரண்டிவிடும் வகையில் செயற்படுகின்றன. கொரோனாவிலிருந்து நாட்டையும் மக்களையும் பாதுகாக்க வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

ஆனாலும், நுகர்வோர் சட்டத்தைப் பாதுகாக்கும் செயற்பாடுகளையும் ஏகநேரத்தில் அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். இல்லையேல், எதற்காக மரணித்தார்கள் எனத் தேடவேண்டியிருக்கும். ஏனெனில், மரணத்துக்குப் பின்னரான பரிசோதனைகளால், மரணங்கள் பல கொரோனா கணக்கில் எழுதப்படுகின்றன.

பொருள்களின் விலையேற்றத்தால், வெளியில் சொல்ல முடியாத அளவுக்கு பலரும் வயிற்றை இறுக்கிகொண்டிருக்கின்றனர். வேலைகள் இல்லை; மேலதிக வருமானங்களும் இல்லை என்றிருக்கும் நிலையில், அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரிப்புகள், வீட்டுக்குள்ளே தானாகவே முடங்கச் செய்துவிடுகின்றன.

நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை கடுமையாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தின் கைகளிலேயே உள்ளது. இதனூடாகவே சாதாரண பொதுமக்களின் உயிர்களைப் பாதுகாக்க முடியும். நாளொன்றுக்கு இரண்டொரு வேளைகள் மட்டுமே, ஆகக்குறைந்த போஷாக்குடன் உணவுகளை உட்கொள்ளும் குடும்பத்தினர், எகிறி நிற்கும் விலையேற்றத்தால், நிரந்தரமாகப் பட்டினி கிடக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையே ஏற்படும்.

கொரோனா தொற்றியோர், மரணித்தோரின் எண்ணிக்கையை மாற்றமுடியாது; ஆனால், அதிகரிக்காமல் கட்டுப்படுத்தலாம். அதேபோல ஏறியிருக்கும் பொருள்களின் விலைகளைக் குறைக்கலாம். அதன் தரத்தை உறுதிப்படுத்தலாம். என்றாலும், கொரோனா மரணங்கள், தொற்றாளர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நாளும் அதிகரித்துகொண்டே செல்வதைப்போல, பொருள்களின் விலைகளும் அதிகரித்தே இருக்கிறது.

ஆகையால், பெருந்தொற்றுக் காலத்தில் நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதை மீளவும் வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

நாம் தேடும் ஆதாயங்கள், நேர்மையாக இருக்க வேண்டும். ஒரு வர்த்தகர் நம்பிக்கையுடன் ஒரு தொழிலைத் தொடங்கினால், அது நிலையாக இருக்க நேர்மை, நாணயம் மிக அவசியம்.

எந்தத் தொழிலிலும் எல்லோரும் உயர் நிலைக்கு வரமுடியும். ஆனால், மக்கள் நலன்பற்றிக் கவனத்தில் எடுக்க வேண்டும். நீங்கள் சரியாக நடந்தால், உங்களை நோக்கி பெருங்கூட்டம் கூடி வரும். இலாபம் என்பது, வெறும் பணம் அல்ல; மக்களை நேசிப்பதால் கிடைக்கும் வரவாகும்.

இணைந்த மக்கள் பலமே, வையகத்தின் செழிப்பாகும். தன்னை மட்டும் கவனிப்பவனும் பிறரது வளர்ச்சியைத் தடுப்பவனும், உலகத்தால் வீசியெறியப்படுகின்றான்.

உலகம் ஒரு பெரிய வீடு. ஒவ்வொரு நாடுகளும் அதன் அறைகள் என்பதை, சகல அரசுகளும் உணரவேண்டும். எமக்கே எல்லாம் என, எந்த வல்லரசும் பேராசை கொண்டால், என்ன நடக்கும் என்பதைக் கற்பனை செய்யமுடியாது. ஒவ்வொரு மனிதனும், இந்த உலகை இயக்குகின்றான். எனவே, எமக்கானதே இந்தப் புவனம்!

பருத்தியூர் பால– வைரவநாதன்

# மக்களின் பசியோடு விளையாடும் ராஜபக்ஷர்கள்



புருஜோத்தமன் தங்கமயில்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பழைய காணொளியொன்று, சமூக ஊடகங்களில் கடந்த இரண்டு, மூன்று நாள்களாகப் பகிரப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதில், "நாட்டு மக்களுக்கு சமையல் எரிவாயுவைக் கிரமமாக வழங்க முடியாத நல்லாட்சி அரசாங்கத்தினர், தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை எவ்வாறு நிறைவேற்றுவார்கள்…?" என்று கேள்வியெழுப்புகின்றார்.

நல்லாட்சிக் காலத்தில், எதிரணி வரிசையில் இருந்த ராஜபக்ஷ(ர்கள்) ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவைக் கட்டியெழுப்பிக் கொண்டிருந்த தருணத்தில், ஆற்றப்பட்ட உரையின் காணொளி அது.

அந்த உரை நிகழ்த்தப்பட்டு சில ஆண்டுகளுக்குள்ளேயே, ராஜபக்ஷர்களின் அரசாங்கம், நாட்டு மக்களை சமையல் எரிவாயுவுக்காக, நீண்ட வரிசைகளில் காத்திருக்க வைத்திருக்கின்றது.

நாட்டில், சமையல் எரிவாயுவை இன்றைக்குப் பெறுவது, பெரும் சாதனையாகப் பார்க்கப்படுகின்றது. எரிவாயு சிலிண்டர்களைச் சுமந்து கொண்டு, நீண்ட வரிசைகளில் மக்கள் காத்திருந்த காட்சிகளை, கடந்த சில நாள்களாகக் கொழும்பு உள்ளிட்ட நாட்டின் நகரங்கள் காட்டின.

நீண்ட வரிசையில் காத்திருந்தும், சமையல் எரிவாயு நிரப்பிய சிலிண்டர்களைப் பெற முடியாது, காலிச் சிலிண்டர்களை சுமந்து கொண்டு, வீட்டுக்கு சென்றோரின் எண்ணிக்கை பல்லாயிரக்கணக்கானது. நகரப் பகுதிகளில் நிலை இப்படியென்றால், கிராமங்களில் நிலைமை இன்னும் மோசமானது. ஒரு மாத காலத்துக்கு முன்னர் இருந்தே, சமையல் எரிவாயுவைக் கிராமங்களில் பெறமுடியாமல் இருந்தது.

ராஜபக்ஷர்களை நாட்டின் நம்பிக்கையான தலைவர்களாக, நிர்வாகிகளாக முன்னிறுத்தி, தேர்தல் காலத்தில் முழங்கிக் கொண்டிருந்த பெண்மணி ஒருவர், கடந்த சில நாள்களுக்கு முன்னர், சமையல் எரிவாயு கிடைக்காத நிலையில், மண்ணெண்ணை அடுப்பைப் பாவிப்பது பற்றிப் பேசியிருந்தார்.

இன்னொருவர், களிமண் அடுப்பைப் பயன்படுத்தத் தொடங்கியிருப்பது பற்றியும் அந்த அடுப்பை எரிப்பதற்கு, தேங்காய் சிரட்டைகளைப் பெறுவது பற்றியும், சமூக ஊடகமொன்றில் பிரஸ்தாபித்துக் கொண்டிருந்தார்.

இவர்கள் எல்லோரும் கொழும்பு மேல்வர்க்கத்தைச் சார்ந்தவர்கள். யாருக்கு என்ன கிடைக்கிறதோ இல்லையோ, கொழும்பு மேற்றட்டு வர்க்கத்தைச் சேர்ந்த மக்களுக்கான அத்தியாவசியப் பொருட்களும் சேவைகளும் தொடர்பான பிரச்சினைகள் ஏற்பட, நாட்டை ஆண்ட எந்த அரசாங்கமும் அனுமதித்ததில்லை.

அதனால், அவர்களுக்கு நாட்டின் பெரும்பான்மை மக்களின் அன்றாடப் பிரச்சினை தொடர்பிலான எந்த அறிவும் அனுபவமும் இருந்ததும் இல்லை. ஆனால், இன்றைக்கு ராஜபக்ஷர்களின் ஆட்சிக் குழப்பத்தால், அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு மற்றும், அதனால் எழும் நெருக்கடி என்றால் என்ன என்று புரியத் தொடங்கி இருக்கின்றது.

ராஜபக்ஷர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் உழுந்து, மஞ்சள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதிக்கான தடையை, எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் விதித்தார்கள். உழுந்தின் விலை கிலோகிராம் ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாய் வரை எட்டியது.

உழுந்தின் மீதான இறக்குமதித் தடையை நீக்குமாறு, கொழும்பு மொத்த வியாபாரிகள் உள்ளிட்ட தரப்புகள் அரசாங்கத்திடம் கோரிய போது, உழுந்தை தமிழ் சிறுபான்மை மக்களே, அதிகமாக நுகர்பவர்கள்; அதனால், அதன் மீதான இறக்குமதிக்கான தடையை நீக்க வேண்டியதில்லை என்ற தோரணையிலான பதில் வழங்கப்பட்டது.

உழுந்தின் மீதான தடை, சிங்கள மக்களைப் பெரியளவில் பாதிக்கவில்லை. அவர்களின் உணவுப் பழக்கத்தில், உழுந்து அவ்வளவு பெரிய வகிபாகத்தை எடுத்துக் கொள்ளவில்லை.

இன்னொரு நாளில், அரிசி இறக்குமதியை அரசாங்கம் மட்டுப்படுத்தியது. இலங்கையின் அரிசி ஆலை முதலாளிகள், இதுதான் சந்தர்ப்பம் என்று, அரிசி விலையைத் தாறுமாறாக உயர்த்தினர். கடந்த இரண்டு ஆண்டுகளில் அரிசியின் விலை 30 சதவீதத்தால் அதிகரித்து இருக்கின்றது.

இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தல் என்பது, இலங்கையின் பணம் வெளிச் செல்வதைத் தடுக்கும் நோக்கில் என்ற பொருளாதார சிந்தனை முன்வைக்கப்படுகின்றது. அதில், குறிப்பிட்டளவு உண்மையும் இருக்கின்றது. ஆனால், நாட்டு மக்களின் வயிற்றுப் பசியோடு விளையாடிக் கொண்டு, 'எடுத்தோம் கவிழ்த்தோம்' என்று எந்தவோர் அரசாங்கமும் முடிவுகளை எடுக்க முடியாது. ராஜபக்ஷர்கள் அதனை எந்தவித குற்றவுணர்ச்சியும் இல்லாமல் செய்து கொண்டிருக்கிறார்கள்.

கொவிட்-19 பெருந்தொற்று, மக்களின் வாழ்வாதாரத்தைக் கிட்டத்தட்ட முடக்கிப் போட்டுவிட்டது. வட்டிக் கடைகளிலும் கடன்களிலும் காலத்தைக் கடத்தும் நிலையொன்றுக்குள் நாட்டின் பெரும்பான்மையானவர்கள் சென்றுவிட்டார்கள். அப்படியான நிலையில்தான், அத்தியாவசியப் பொருட்களுக்கான இறக்குமதித் தடையும் அதனால் உள்நாட்டில் பொருட்களின் விலை அதிகரிப்பும், பெரும் சுமையாக மாறுகின்றது.

நாட்டின் எந்தவொரு பாகத்திலும், பால்மா பைகளைப் பெற முடியாத சூழல் இருக்கின்றது. இலங்கை மக்களின் உணவு, தேநீரோடு ஆரம்பிப்பது! பல இலட்சக்கணக்கான மக்களின் காலை உணவே, பால் தேநீர் மட்டுந்தான்.

> **ராஜபக்ஷர்களின் புதிய இலங்கைக்கான இலக்கு என்பது, அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, விலை அதிகரிப்பு என்கிற சாதாரண மக்களின் மீதான நெருக்கடிகளுடன் ஆரம்பித்திருக்கின்றது**

அப்படியான நிலையில், பால்மா பைகளுக்கான தட்டுப்பாடு, அரசாங்கத்தின் முறையற்ற பொருளாதார கொள்கைகளால் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றது. இந்தியா உள்ளிட்ட நாடுகள் போல, இலங்கையில் பால் தேநீர், நேரடியாகப் பாலைக் கொண்டு தயாரிக்கப்படுவதில்லை. ஏனெனில், நேரடியான பாலின் விலை, பால்மா விலையோடு ஒப்பிடும் போது மிகவும் அதிகம்.

எதிர்க்கட்சி வரிசையில் இருந்த போது, நல்லாட்சி அரசாங்கத்தினரின் சமையல் எரிவாயு விநியோக குழப்பத்தை விமர்சித்த ராஜபக்ஷர்கள், இன்றைக்கு தேநீர் தயாரிப்புக்கான பால்மாவுக்கான தட்டுப்பாடு, உணவுத் தயாரிப்பில் பெரும் பங்கை எடுத்துக் கொள்ளும் அரிசிக்கான விலை அதிகரிப்பு என்று செய்து, இறுதியில் சமையல் எரிவாயுவுக்கான தட்டுப்பாடு வரையில் கொண்டு வந்து சேர்ந்திருக்கின்றார்கள்.

> **எதிர்க்கட்சி வரிசையில் இருந்த போது, நல்லாட்சி அரசாங்கத்தினரின் சமையல் எரிவாயு விநியோக குழப்பத்தை விமர்சித்த ராஜபக்ஷர்கள், இன்றைக்கு பால்மாவுக்கான தட்டுப்பாடு, அரிசிக்கான விலை அதிகரிப்பு என்று செய்து, இறுதியில் சமையல் எரிவாயுவுக்கான தட்டுப்பாடு வரையில் கொண்டு வந்து சேர்ந்திருக்கின்றார்கள்**

நாட்டின் உள்ளூர் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவது என்பது, எந்தவோர் அரசாங்கமும் செய்ய வேண்டியதுதான். ஆனால், மக்களின் பொருளாதார நிலை, அத்தியாவசியப் பொருட்களின் நெருக்கடிகள் குறித்து, எந்தவித தெளிவும் இல்லாமல், முடிவுகளை எடுக்கும் போது, நாடு இவ்வாறான நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டி வரும்.

இதனால், நாட்டில் கறுப்புச் சந்தையொன்று பெரிய அளவில் வளரும். ஒரு சில பண முதலைகள் மாத்திரம் கறுப்புப் பணத்தை சேர்க்கும். கறுப்புப் பணத்தால் நாட்டுக்கு எந்தவொரு பயனும் ஏற்படாது. அதுதான், துறைசார் நிபுணர்களுடன் ஆலோசித்து, ஆட்சியாளர்கள் முடிவுகளை எடுக்க வேண்டும் என்பதாகும்.

நாடு ஏற்கெனவே கடனில் மூழ்கிக் கொண்டிருக்கின்றது. நாட்டின் பணப்பெறுமதி என்பது படுவீழ்ச்சி கண்டுள்ளது. அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாயின் பெறுமதி, இன்றைய சூழலில் 230 ரூபாய் அளவுக்கு வந்துவிட்டது. வங்கிகளுக்கு ஊடாக 200 ரூபாய் அளவில் பேணப்பட்டாலும், உண்மை நிலை மோசமானது. அதனால்தான், அத்தியாவசியப் பொருட்களில் விலை உயர்வும் கிடுகிடுவென அதிகரித்திருக்கின்றது.

ராஜபக்ஷர்களின் புதிய இலங்கைக்கான இலக்கு என்பது, அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, விலை அதிகரிப்பு என்கிற சாதாரண மக்களின் மீதான நெருக்கடிகளுடன் ஆரம்பித்திருக்கின்றது.

ராஜபக்ஷர்களுக்காக அளிக்கப்பட்ட 69 இலட்சம் வாக்குகளும் இவ்வாறான கறுப்பு விடியலுக்கானதா என்று தென் இலங்கை கண்ணீர் வடிக்கத் தொடங்கியிருக்கின்றது. இந்த நிலையிலிருந்து நாடு மீள்வதற்கான எந்தவோர் ஏற்பாடுகளையும் காண முடியவில்லை.

## கடிதங்கள்

### நந்திக் கடலில் நன்னீர் சேமிப்பு

முல்லைத்தீவு, நந்திக் கடல் சூழலில் உவர் பரவல் காணப்படும் பகுதிகளில் நன்னீரைத் தேக்குவதற்கான நடவடிக்கையை முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

முத்தையன்கட்டு குளத்தின் நீர் உட்பட, பல்வேறு ஆற்றுப்படுக்கைகளின் நீர், நந்திக் கடலை நிரப்புவதால், வட்டுவாகல் பகுதியில் இயற்கையான மண் அணை வெட்டப்பட்டு, பெருங்கடலுடன் நந்திக் கடலின் நீரைக் கலக்க விடுகின்ற நிகழ்வு ஆண்டு தோறும் நடைபெறும்.

நந்திக் கடலில் கூடுதலான நீரைத் தேக்கி வைப்பதற்கான முயற்சிகளை, முன்னாள் மாவட்டச் செயலாளர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் முன்னெடுத்து இருந்தார். ஆனால், வற்றாப்பளை பக்கமாக வயல் நிலங்களில், கூடுதலாக நீர் தேங்குவதால் நெற்செய்கை பாதிக்கப்படுவதாக விவசாயிகளால் தெரிவிக்கப்பட்ட நிலையில், வட்டுவாகல் பகுதியில் இயற்கை அணையை வெட்டி விடும் முடிவு எடுக்கப்பட்டது.

இதைவிட, போர்கால மண் அணைகளாலும் இயற்கையாகவும் நந்திக் கடலின் ஆழம் குறைவடைந்திருப்பதால், கூடுதலான நீரைச் சேமிக்க முடியாதுள்ளது. இந்நிலையில், நந்திக் கடலுக்கு அருகில் உவராகிவரும் நிலப் பகுதிகளில், பெரும் பாத்திகளை உருவாக்கி, மழைக் காலத்தில் கூடுதலான நன்னீரைத் தேக்குவதன் மூலம், உவர் நிலம் நன்னிலமாக மாறும். அத்துடன், முல்லைத்தீவு நகரத்தின் நிலத்தடி நீரைப் பாதுகாக்கக் கூடிய சூழ்நிலைகள் உருவாகும். இது தொடர்பான திட்டங்களை மாவட்டச் செயலகம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே,முல்லைத்தீவு பொது அமைப்புகளின் கோரிக்கையாக உள்ளது.

நடராசா கிருஸ்ணகுமார்

# அன்புள்ள எனக்கு!

## 18 வயதான எனக்கு ஓர் அன்பான கடிதம்!


@UNFPASriLanka

நீ இப்போது என்ன செய்கின்றாய், எங்கிருக்கிறாய் என்பது, எனக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான், நான் உனக்கு எழுதுகிறேன். நீ இதை வாசிக்க வேண்டும்; இது, உனக்குத் தேவை என்பது எனக்குத் தெரியும்.

நீ அறிந்துகொள்ள விரும்பும், பெரிய பெரிய கேள்விகளுக்கான பதில்கள் என்னிடம் இல்லை. ஆனாலும், பின்னோக்கிப் பார்க்கும் போது, இதுபோல என்னுடன் வெளிப்படையாக கதைத்து, எனக்கு வழிகாட்டல் வழங்க ஒருவர் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

அதனால்தான் உலகமே இளைஞர் தினத்தைக் கொண்டாடும் இந்த நாளில், நான் உனக்கு எழுதுகிறேன். உனக்குக் கூற வேண்டிய சில ஆலோசனைகள், என்னிடம் உள்ளன. நீ, இந்த நேரத்தில் பல விடயங்களுடன் போராடிக்கொண்டிருக்கிறாய் என்பது, எனக்குத் தெரியும். கவலைப்படாதே! நான் கூறுவதை நம்பு. ‘எல்லாம் நன்மையாகவே மாறும். இதை விட மோசமான சூழல்களும் உள்ளன’ என்ற வார்த்தைகளை, நீ விரும்பமாட்டாய் என்பது எனக்குத் தெரியும். அதனால், நீ கேட்க விரும்பும் சிலவற்றை, நான் கூறுகிறேன்.

நீ, செக்ஸ் (பாலியல் உறவு), காதல், உறவுகள் குறித்து அறிய விரும்புகிறாய். நான் சொல்வது சரிதானே? நான், உனக்கு அதைப் பற்றிச் சொல்லித்தருகிறேன்.

### அன்புள்ள எனக்கு!

நான், உன்மீது அதிக அன்பு கொண்டுள்ளேன்; அத்தோடு, உன்னை நினைத்துப் பெருமைப்படுகிறேன். உன்னிடம், நீ அறியாத பலம் உள்ளது. நீ நினைப்பதை விட, நீ மிக மிகச் சிறந்தவள். நீ, முதற்காதலால் வரும் அந்த உற்சாகம், சந்தோசம், வெட்கம் போன்ற எல்லாம் கலந்த மனநிலையை, உணரக் காத்திருக்கிறாய். ஆனால், உன் முதல் காதலன், அந்த உணர்வுகளில் எதையும் உனக்குத் தரவில்லை.

ஆனால், உன் 20 வயதை அடைந்ததும் உன்னால் கூட நம்ப முடியாத தீர்மானம் ஒன்றை, நீ செய்வாய்! உனக்குச் சந்தோஷம் அளிக்காததால், நீ இந்த உறவை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவாய். இந்தத் தீர்மானத்தை எடுக்க, உனக்குச் சில காலம் தேவைப்படும். எனினும், நீ தயாரானதும் இதிலிருந்து வெளியேறுவாய். இப்போது, அது நடக்க முடியாததாகவே உனக்குத் தோன்றும் என்பது எனக்குத் தெரியும். ஆனால், ஆரோக்கியமற்ற உறவை விட, உனது சுயஆரோக்கியமும் சுயபராமரிப்பும் முக்கியம் எனும் தீர்மானத்தை நீ எடுப்பாய்!

உனக்கு சுயமதிப்பும் தகுதியும் உள்ளது. உனக்குச் சந்தோசமளிக்காத, உன்னைக் கட்டுப்படுத்திக் கட்டிவைக்கும் உறவில், நீ வாழத்தேவை இல்லை. உனக்கு, எல்லா நேரத்திலும் தெரிவு செய்யும் உரிமையும் உன் குரலை உயர்த்திப் பேசும் உரிமையும் இருக்கிறது. உனக்கு ஏதேனும் ஒன்று சரியானதாகப் படவில்லையெனில், “வேண்டாம்”, “இல்லை” என உரக்கக்கூறு. உன் வாழ்வை, உன் சொந்த உரிமையாக்கிக் கொள்!

எனது சுயமதிப்பு, சம்மதம் தெரிவித்தல், பாலியல்பு, எம் உரிமைகள் குறித்தெல்லாம் பாடசாலையில் கற்பித்திருந்தால் எவ்வளவு நன்மையாக இருந்திருக்கும்! பாடசாலை, இந்த நேரத்தில் உனக்கு ஏமாற்றத்தை அளிக்கக்கூடும். பதில் இல்லாத கேள்விகள், உன்னிடம் நிறைய இருக்கின்றன. அதற்கான பதிலைக் கூற, யாரும் தயாராக இல்லை என்பதும் எனக்குத் தெரியும்.

அம்மா, ‘செக்ஸ்’ என்ற சொல்லைச் சொல்லவே வெட்கப்படுகிறார். ஆனாலும், தயவுசெய்து இவை குறித்துக் காணப்படும் உன் வயதுக்கேற்ற தகவல்களைத் தேடிப் படிக்க முயற்சி செய்! நீ நம்பும் ஒருவருடன், இது குறித்துப் பேசு! நீ நம்பும், உன்னைப் புரிந்து கொள்ளும் ஒரு நபராக, அவர் இருப்பதை உறுதி செய்துகொள்!

உன் மனச்சாட்சிக்குத் தெரியும், நீ இந்தக் காதல் உறவில் இருப்பது, நீ யாராக உணர்கின்றாய் என்பதை மறைப்பதற்கே! வித்தியாசமானவளாக இருப்பதை

> **உன் மனச்சாட்சிக்குத் தெரியும், நீ இந்தக் காதல் உறவில் இருப்பது, நீ யாராக உணர்கின்றாய் என்பதை மறைப்பதற்கே! வித்தியாசமானவளாக இருப்பதை மறைக்க; உன் அடையாளத்தை மறைக்க...**

மறைக்க; உன் அடையாளத்தை மறைக்க, நீ பல தடவைகள் முயற்சித்திருக்கின்றாய் - அதுவே உன் உண்மையான அடையாளம்.

நான், இப்போது சுதந்திரமாக அதை அனுபவிப்பதால், இதை உறுதியாகக் கூறுகிறேன். எம்மை நாமாக ஏற்றுக்கொள்ள, அம்மாவுக்கு இன்னும் பலகாலம் எடுக்கும். ஆனால், நான் கூறுவதை நம்பு! 2021ஆம் ஆண்டில், இந்த நிலையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக மாறுகிறது.

இப்பொழுது உன்னால், உன் மனக்கூட்டில் இருந்து வெளியேற முடியாது. யாரும் உன்னை இப்போது ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆனால், நான் கூறுவதை நம்பு! எதிர்காலத்தில் எமக்கான நிலை சிறப்பாக இருக்கிறது.

நான் கூறுவதை, பிழையாக விளங்கிக்கொள்ளாதே! உன் வாழ்வு, எந்தப் பிரச்சினையும் இல்லாத வசந்த காலமாக மாறாது. ஆனாலும், உன்னைப் புரிந்து கொண்டு, உன்னை ஏற்றுக்கொள்ளும் உண்மையான நண்பர்கள், உன்னுடன் இருப்பார்கள்.

அம்மா, உன்னை இன்னுமே ஏற்றுக்கொள்ளா விட்டாலும், அவள், உன்னை அன்பு செய்கிறாள். எல்லாவற்றுக்கும் மேல் நீ, உன்னை முழுமையாக ஏற்றுக்கொண்டு, அன்பு செய்வாய்! உன் கல்வியில் கவனத்தைச் செலுத்து; ஏனெனில், அதை யாருமே உன்னிடமிருந்து பறிக்க முடியாது. அது, நீ ஒரு நாள், உன் சொந்தக் கால்களில் நிற்க, உனக்காக நீயே குரல் கொடுக்க, உனக்கு உதவி செய்யும்.

தைரியமாக இரு! அதே நேரம், நீ நம்பும் யாரையேனும், உன் அருகில் வைத்துக்கொள். நீ முழுமையாகத் தயாரானதும் உன் அடையாளத்தை வெளிப்படுத்த, இது உனக்கு உதவும்.

இது, உனக்குள் நீயே வைத்துக்கொள்ள வேண்டிய ஒரு பாரம் என, ஒருபோதும் நினைக்காதே. இந்த உலகம், உன் அடையாளத்தைக் கேள்விக்குள்ளாக்கி, அதை ஒரு பிரச்சினையாக எண்ணலாம்.

ஆனால், அது அவர்களது பிரச்சினை. அது, உன்னைப் பாதிக்க இடமளிக்காதே. இது, உனது பயணம்; அதைத் தைரியமாக ஏற்றுக்கொள். எமக்கு முன் வாழ்ந்த பலரைப்போல, நாமும் எம் அங்கிகாரத்துக்காக, ஏற்றுக்கொள்ளலுக்காக, மதிப்பதற்காகப் போராடுவோம்.

நீ, உன் உள்ளத்தில் குற்ற உணர்வுடன் போராடுகின்றாய் என்பதும் எனக்குத் தெரியும். உயர்தரப் பாடசாலை, சில நேரம் கடினமாக இருக்கலாம். அங்கு, நீ தப்பிக்க, உன்னை நீயே காப்பாற்றிக்கொள்ள வேண்டி இருக்கும். இதனால்தான் நீ, பிரியாவை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும் உன் உள்மனத்துக்குத் தெரியும், நீ அவளது உடல் பலவீனம் (ஊனம்) காரணமாக, அவளை ஒதுக்கி வைத்தது தவறு என்று!

அவள், எந்த தவறும் செய்யாமலேயே, தான் பயனற்றவள், தன்னால் எதுவும் இயலாது என நினைக்க வைத்தார்கள்; ஆசிரியர்களுக்குக் கூட, அவள் நிலையை எப்படி அணுகுவதெனத் தெரியவில்லை. அவள் அந்த இடத்தில், ஏற்றுக்கொள்ளப்பட எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பாள் என, எனக்கு இப்போது புரிகிறது.

அனைவரும் அவளை பிரயோசனமற்றவளாகவும் அவளுக்காகச் செய்யப்படுவதெல்லாம் வீணானது, அவள் ஒருநாளும் சமூகத்துக்கு உபயோகப்பட மாட்டாள் என்பது போலவே அவளை நடத்தினார்கள்.

ஆனால், அது எதுவும் உண்மை இல்லை. இன்று, அவள் மிகவும் உயர்ந்த நிலையை அடைந்துள்ளாள். அவள் விசேட தேவையுடையோரின் உரிமைகளுக்காக, சிவில் சமூக அமைப்புகள், பாடசாலைகள், ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்துடன் இணைந்து பணியாற்றும் ஒரு சமூக ஆர்வலர். அவளைப்போன்ற சிறுவர்கள், இளைஞர்கள் போன்றோர், அவள் சந்தித்த பாகுபாடுகளைச் சந்திக்கக்கூடாது என்பதற்காக, அவள் அயராது பணியாற்றுகின்றாள். எனக்குத் தெரியும், இப்போது நீ அவளுக்காகப் பேச வெட்கப்படுகின்றாய்!

ஆனால், எதிர்காலத்தில் நீ அவளைத் தொடர்பு கொள்வாய். நீ செய்த தவறுகளுக்குப் பிரதியீடு செய்து, அவளது முன்னுதாரணமான செயற்பாடுகளை ஆதரிப்பாய்! சரியானதைச் செய்ய, நல்ல நேரம், சரியான நேரம் எனக் காலம் இல்லை; அதை எப்போது வேண்டுமானாலும் நாம் செய்யலாம்.

கடைசியாக, உன்னில் நீயே நம்பிக்கை வை; யாரும் உன்னைக் குறைத்து மதிப்பிட இடமளிக்காதே. உன்னால் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். அதை என்றுமே மறந்து விடாதே.... இந்த உலகை மாற்ற உன்னால் முடியும்.

அன்புடன்,
என்றும் உண்மையுள்ள
நான்.

(2021 ஆம் ஆண்டின் சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு, ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின், சர்வதேச சனத்தொகை மற்றும் அபிவிருத்தி சமவாயத்தின் கொள்கை செயற்பாட்டுக்குப் பங்களிப்பு வழங்கிய இளைஞர்களுடன் நடத்தப்பட்ட உரையாடல்களில் எழுந்த விடயங்களைக் கொண்டு, இந்த கடிதம் வரையப்பட்டுள்ளது.)



> **அம்மா, இன்னும் உன்னை ஏற்றுக் கொள்ளாவிடினும், உன்னை அன்பு செய்கிறாள். எல்லாவற்றுக்கும் மேல் நீ, உன்னை முழுமையாக ஏற்றுக்கொண்டு, அன்பு செய்வாய்! உன் கல்வியில் கவனத்தைச் செலுத்து; ஏனெனில், அதை யாருமே உன்னிடமிருந்து பறிக்க முடியாது**



---

## புதுடெல்லி

# கலந்து ஏற்றும் ஆய்வுக்கு அனுமதி




கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசிகளில் பல, இரண்டு தவணைகள் செலுத்தவேண்டிய தடுப்பூசிகளாகவே உள்ளன. இந்நிலையில், கோவேக்சின், கோவிஷீல்டு ஆகிய 2 தடுப்பூசிகளைக் கலந்து செலுத்துவதற்கான ஆய்வுக்கு இந்திய மருந்து தரக் கட்டுப்பாடு ஆணையம் அனுமதி அளித்துள்ளது.

முதல் தவணையில் ஒரு தடுப்பூசியையும் 2 ஆவது தவணையில் மற்றொரு தடுப்பூசியையும் யாரும் இங்கு பரிந்துரைப்பதில்லை. இதுகுறித்த ஆய்வுகள், வெளிநாடுகளில் நடந்து வருகின்றன. இதேவேளை, கோவேக்சின், கோவிஷீல்டு தடுப்பூசிகளை செலுத்துகிறபோது, அது பாதுகாப்பானது மட்டுமல்ல; கொரோனா வைரஸுக்கு எதிராக சிறப்பான பலனைத்தருகிறது என இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், இரு வகையான தடுப்பூசிகளை கலந்து பயன்படுத்தினனால் நல்ல பயன் தரும் என ஐ.சி.எம்.ஆர். வெளியிட்ட அறிக்கையை அடுத்து இந்திய மருந்து கட்டுப்பாட்டு ஆனையம் அனுமதி வழங்கியுள்ளது.

## பெங்களூர்



# பொம்மை கேட்ட பரிசு தெரியுமா?

கர்நாடக முதலமைச்சராகக் கடந்த ஜூலை 28ஆம் திகதியன்று பசவராஜ் பொம்மை பதவி ஏற்றார்.

அவரை வரவேற்கும் வகையில் பொலிஸ் அதிகாரிகள் அவருக்கு பூங்கொத்து கொடுத்து, சால்வை அணிவிக்க முயன்றனர். ஆனால், அதனை பசவராஜ் பொம்மை நிராகரித்துவிட்டார். மேலும், இனி முதலமைச்சருக்கு பூங்கொத்து, சால்வை, நினைவு பரிசு வழங்குவதைத் தவிர்க்க வேண்டும் என பணித்தார்.

இது தேவையற்ற செலவு எனக் கூறினார். முதலமைச்சரைச் சந்திக்க வருபவர்கள், அதிகாரிகள் என யாராக இருந்தாலும், பூங்கொத்து, சால்வை, பழக்கூடை, நினைவு பரிசுகள் வழங்குவதைத் தவிர்க்க வேண்டும்.

மேலும் அரசு தொடர்பான கூட்டங்கள், விழாக்களிலும் இதே நடைமுறையை கடைப்பிடிக்க வேண்டும். அதற்கு பதிலாக கன்னட புத்தகங்களை மட்டுமே வழங்க வேண்டும். இவ்வாறு அந்தப் பணிப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தனக்கு இவ்வாறு வரும் புத்தகங்களை அவர் உடுப்பி மாவட்டம் கார்கலாவில் உள்ள நூலகத்துக்கு வழங்கி வருகிறார்.

## சென்னை

# இரகசியத்தை வழங்கி இழக்கும் ஏமாளிகள்

மக்களைக் கவரும் விளம்பரங்களின் ஊடாக, வீடுகளுக்குள் இருந்தே பல இலட்சம் ரூபாய்களைச் சம்பாதிக்கும் ஆசாமிகள் இருக்கும் அதேவேளை, வீட்டிலிருந்தவாறே, ஆயிரக்கணக்கான ரூபாய்களை இழந்தும் விடுகின்றனர்.

பேஸ்புக் பக்கத்தில் வந்த மோட்டார் சைக்கிள் விற்பனை விளம்பரத்தைப் பார்த்து, அதில் இருந்த செல்போனில் தொடர்பு கொண்டார், சென்னை விருகம்பாக்கத்தைச் சேர்ந்த காமாட்சி.

மறுமுனையில் பேசிய ஆசாமி, மோட்டார்சைக்கிள் வேண்டுமானால் ரூ.500 ‘கூகுள் பே’ வாயிலாக அனுப்பும்படி கூறி ‘லிங்க்’கை அனுப்பினார். அதை நம்பி, காமாட்சி பணத்தை அனுப்பினார். சிறிது நேரத்தில், அவரது வங்கி கணக்கில் இருந்து மேலும் ரூ.36 ஆயிரம் எடுக்கப்பட்டதாக அவரது செல்போனுக்கு குறுந்தகவல் வந்தது.

இதேபோல், அதே பகுதியைச் சேர்ந்த காயத்ரி என்பவரை செல்போனில் தொடர்பு கொண்டு பேசிய ஆசாமி, வேலை வாய்ப்பு வாங்கித் தரும் நிறுவனத்தில் இருந்து பேசுவதாகக் கூறி, அவரது ‘பயோ டேட்டா’, வங்கி கணக்கு, இரகசிய குறியீடு எண் உள்ளிட்ட விவரங்களைக் கேட்டு வாங்கினார். சிறிது நேரத்தில் அவரது வங்கி கணக்கில் இருந்தும் ரூ.35 ஆயிரம் எடுக்கப்பட்டதாக குறுந்தகவல் வந்தது. இந்த நூதன பண மோசடி குறித்து விருகம்பாக்கம் பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

## வொஷிங்டன்

# கடலோர நகரங்கள் 12 நீருக்குள் மூழ்கும்



இந்தியாவின் 12 கடலோர நகரங்கள், 2100ஆம் ஆண்டுக்குள் நீருக்குள் மூழ்கும் அபாயம் உள்ளதாக நாசா எச்சரிக்கை விடுத்துள்ளது.

காலநிலை மாற்றம் காரணமாக, புவி வெப்பநிலை உயர்ந்து வருவதால், கடல் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருவதாக, சர்வதேச சுற்றுச்சூழல் அமைப்புகள் எச்சரித்து வருகின்றன.

உலகளாவிய சராசரி கடல் மட்டம் ஆண்டுக்கு சுமார் 3.7 மில்லிமீற்றர் என்ற விகிதத்தில் உயர்ந்து வருகிறது. மேலும் இமயமலை உள்ளிட்ட பனிமலைகளிலும் பனிப்பாறைகள் உருகும் விகிதம் அதிகரித்துள்ளதாக் கூறப்படுகிறது.

இந்நிலையில், காலநிலை மாற்றம் குறித்த அரசாங்கங்களுக்கு இடையிலான குழு (IPCC) அறிக்கையின் அடிப்படையில் கடல் நீர் மட்டம் உயர்வது குறித்த தரவுகளை, அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா வெளியிட்டு உள்ளது.

அதில், 2100 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் கடலோரப்பகுதியில் உள்ள 12 கடலோர நகரங்கள் சராசரியாக 3 மீற்றர் அளவு நீருக்குள் மூழ்கும் அபாயம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் நீரில் மூழ்கும் அபாயத்தில் உள்ள 12 நகரங்கள் வருமாறு:

- கண்ட்லா, குஜராத் - 1.87 அடி
- ஒக்ஹா, குஜராத் - 1.96 அடி
- பவுநகர், குஜராத் - 2.70 அடி
- மும்பை, மகாராஷ்டிரா- 1.90 அடி
- மோர்முகாவ், கோவா - 2.06 அடி
- மங்களூர், கர்நாடகா - 1.87 அடி
- கொச்சி, கேரளா - 2.32 அடி
- பரதீப், ஒடிசா- 1.93 அடி
- கிதிர்பூர், கொல்கத்தா - 0.49 அடி
- விசாகப்பட்டினம், ஆந்திரா - 1.77 அடி
- சென்னை, தமிழ்நாடு - 1.87 அடி
- தூத்துக்குடி, தமிழ்நாடு - 1.9 அடி

## பூந்தமல்லி,

# பட்டதாரி ‘விக்’கின் பகற்கொள்ளை



கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரைச் சேர்ந்தவர் அறிவழகன் (வயது 42). அவர் ஒரு பட்டதாரி, எந்த வேலைக்கும் செல்லாத அவர், பகலில் வீடுகளில் தனியாக இருக்கும் பெண்களை மிரட்டி உல்லாசம் அனுபவித்து வந்துள்ளார். அதனை வீடியோ எடுத்து பணமும் பறித்துள்ளார்.

அந்த வீடியோவை வைத்து, 50க்கும் மேற்பட்ட பெண்களை மிரட்டி கற்பழித்து உள்ளார்.

சிறையிலிருந்து விடுதலையான இவர், பூட்டிய வீடுகளை குறி வைத்து கொள்ளையடித்து வந்தார். அறிவழகன் எப்போதும் மொட்டை தலையுடன்தான் திருடி வந்தார். எனினும், மொட்டை தலையில் ‘விக்’ வைத்து வைரிசையை காட்டி உள்ளார்.



சீனா

### டெல்டா பரவலை கட்டுப்படுத்தத் தவறிய

# அதிகாரிகளுக்கு தண்டனை

டெல்டா மாறி பரவல் ஒன்றைக் கட்டுப்படுத்தத் தவறிய 40க்கும் மேற்பட்ட உள்ளூர் அதிகாரிகளை சீனா தண்டித்துள்ளது.

ஓராண்டுக்கும் மேலாக, சீனாவில் இருக்கும் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த அதிகாரிகள் தடுமாறுகையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தற்போதைய பரவலானது கிழக்கு நகரான நன்ஜிங்கில் முதலில் தோன்றியதுடன், சீனாவின் 31 மாகாணங்களில் அரைவாசிக்கும் மேலாகப் பரவியதுடன், 1,000க்கும் மேற்பட்ட குணங்குறிகளற்ற தொற்றுகளை மூன்று வாரங்களில் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், அங்கு கடுமையான முடக்கம், பாரிய சோதனை, நீடித்த தனிமைப்படுத்தல்கள் என்பன விதிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையிலேயே, உள்ளூர் அரசாங்கங்களின் தலைவர்கள், சுகாதார ஆணைக்குழுக்களின் தலைவர்கள், வைத்தியசாலை, விமான நிலையங்களின் தலைவர்கள் 47 பேர் பதவி நீக்கப்பட்டுள்ளனர்.



ச. அரேபியா

## மோசடிக்கு எதிரான நடவடிக்கை

### 207 பேர் கைது

சவுதி அரேபியாவின் முடிக்குரிய இளவரசர் மொஹமட் பின் சல்மானின் மோசடிக்கெதிரான புதிய நடவடிக்கையில், அரசாங்க அமைச்சுகளிலிருந்து 207 பணியாளர் கைது செய்யப்பட்டுள்ளதாக அந்நாடு அறிவித்துள்ளது.

> **சவுதி அரேபியாவின் முடிக்குரிய இளவரசரின் மோசடிக்கெதிரான புதிய நடவடிக்கையில், அரசாங்க அமைச்சுகளிலிருந்து 207 பணியாளர் கைது செய்யப்பட்டுள்ளனர்**

கடந்த திங்கட்கிழமை இரவே குறித்த கைதுகளை சவுதியின் தேசிய மோசடிக்கெதிரான ஆணைக்குழு அறிவித்திருந்தது.

இந்நிலையில், கைது செய்யப்பட்டோர் பெயரிட்டிருக்கப்படாததுடன், எப்போது அவர்கள் கைது செய்யப்பட்டார்கள் எனத் தெரியவில்லை.



## மனைவியைச் சுமந்து ஓட்டம்

மனைவியைத் தலைகீழாக தோளில் சுமந்தவாறு, மனைவியைக் காவும் எஸ்தோனிய ஓட்டத்தில், ஹங்கேரியர்கள் பங்கேற்கின்றனர்.

ஐ. அமெரிக்கா

### பாலியல் துன்புறுத்தல் விவகாரம்:

## நியூயோர்க் ஆளுநர் குக்குமோ இராஜினாமா



ஐக்கிய அமெரிக்காவின் நியூயோர்க் ஆளுநர் அன்றூ குக்குமோ நேற்று முன்தினம் இராஜினாமா செய்துள்ளார்.

அதிகரித்து வரும் சட்ட அழுத்தங்கள், பதவி விலகுமாறான ஐ. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் ஏனையோரிடமிருந்தான வலியுறுத்தல்களையடுத்தே குக்குமோ பதவி விலகியுள்ளார்.

11 பெண்களை பாலியல் ரீதியாக குக்குமோ துன்புறுத்தியாக விசாரணைகளில் கண்டு பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

2011ஆம் ஆண்டு முதல் ஆளுநராகக் கடமையாற்றும் குக்குமோ, எதிர்காலத்தில் ஐ. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் எனக் கருதப்பட்டிருந்தது.

மியான்மார்

### படைகளிடமிருந்து தப்பிக்க

## கட்டடத்திலிருந்து குதித்த மூவர் பலி

மியான்மாரின் பிரதான நகரமான யங்கூனிலுள்ள கட்டடம் ஒன்றிலிருந்து குதித்தவர்களில், குறைந்தது மூவர் உயிரிழந்ததுடன், சிலர் காயமடைந்துள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இச்சம்பவம், நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

பாதுகாப்புப் படைகளிடமிருந்து தப்பிக்கும்பொருட்டே, இவர்கள் கட்டடத்தில் இருந்து குதித்ததாகத் தெரியவருகின்றது.



அல்ஜீரியா

### காட்டுத்தீயால்

## உயிரிழந்தோர் தொகை அதிகரிப்பு

### 25 படைவீரர்களும் உயிரிழப்பு



அல்ஜீரியாவின் தலைநகருக்கு கிழக்காகவுள்ள காடுகள், கிராமங்களில் பரவி வரும் காட்டுத்தீயிலிருந்து பொதுமக்களைக் காப்பாற்றுகையில் 25 படைவீரர்கள் உயிரிழந்ததாக அந்நாட்டு ஜனாதிபதி அப்டெல்மட்ஜிட் டெப்பௌனே தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், 100 பேரை படைவீரர்கள் காப்பாற்றியதாக ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஏழு பொதுமக்களும் தீயால் இறந்ததாக உள்நாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.



### இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்: இந்தியாவை

# சமாளிக்குமா இங்கிலாந்து?

இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது லோர்ட்ஸில் இலங்கை நேரப்படி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் ஜோ றூட், ஜொனி பெயார்ஸ்டோவைத் தவிர்ந்த ஏனைய வீரர்களை இந்தியப் பந்துவீச்சாளர் ஆதிக்கம் செலுத்திய நிலையில், இந்த மோதலிலேயே இந்த டெஸ்டின் முடிவு தீர்மானிக்கப்படப் போகின்றது.

இந்நிலையில், இங்கிலாந்துக் குழாமில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள சிரேஷ்ட சுழற்பந்துவீச்சாளரான மொயின் அலி, டான் லோரன்ஸை அணியில் பிரதியிடுவார் என எதிர்பார்க்கப்படுவதோடு, ஸக் க்றொலியை ஹசீப் ஹமீட் பிரதியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய அணியைப் பொறுத்த வரையில், ஷர்துல் தாக்கூருக்குப் பதில் இரவிச்சந்திரன் அஷ்வின் களமிறங்கக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இதேவேளை, செட்டேஸ்வர் புஜாரா உடனடியாக ஓட்டங்களைப் பெற வேண்டியுள்ளதுடன், அணித்தலைவர் விராட் கோலி, அஜின்கியா ரஹானே ஆகியோரும் ஓட்டங்களைப் பெற வேண்டியுள்ளது.





### கல்முனை வலய அலுவலகத்தில்

## 10 நிமிடங்கள் உடற்பயிற்சி

■ ஏ.எல்.எம். ஷினாஸ், எம்.என்.எம்.அப்றாஸ்

தேசிய விளையாட்டு தினத்தை முனனிட்டு இளைஞர் விவகார மற்றும் விளையாட்ட மைச்சின் அறிவுறுத்த லுக்கமைவாக அரசாங்க உத்தியோக த்தர்களின் விளையா ட்டுத் திறனையும், உடற்பயிற்சி திறனையும் விருத்தி செய்யும் வகையில் 10 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்யும் நிகழ்வானது, கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். புவனேந்திரன் தலைமையில் உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் யு.எல்.எம். சாஜீத், உடற்கல்வி ஆலோசகர் ஐ.எல்.எம். இபராஹீம் ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை வலய பாடசாலை விளையாட்டு பயிற்றுவிப்பா ளர்களின் ஒழுங்கமைப்பில் இந்த உடற்பயிற்சி இடம்பெற்றது.



### பங்கூஸ் அமைப்பின் புட்சால் தொடர்:

## சம்பியனான பொஸிட்டிவ்

■ எம்.யூ.எம். சனூன்

புத்தளம் நகரின் சமூக நலன்புரி அமைப்பான பங்கூஸ் அமைப்பினர் ஏற்பாடு செய்த அணிக்கு ஐந்து பேரைக் கொண்ட புட்சால் கால்பந்தாட்டத் தொடரில் பொஸிட்டிவ் சாஹிரா சம்பியனானது.

புத்தளம் வெஸ்டன் சோல்டன் வீதியில் அமைந்திருக்கின்ற சேவிஸ் மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற 15 அணிகள் கலந்து கொண்ட இத்தொடரின் அரையிறுதிப் போட்டிகளுக்கு கோப்ரா, பொஸிட்டிவ் சாஹிரா, ஜோக்கர் கிங்ஸ், சாஹிரா ஒரியன்ஸ் ஆகிய அணிகள் தெரிவாகின.

இதிலிருந்து இறுதிப் போட்டியில் ஜோக்கர் கிங்ஸை வென்று பொஸிட்டிவ் சாஹிரா சம்பியனானது.

சம்பியனான பொஸிட்டிவ் சாஹிரா அணிக்கு 10,000 ரூபாய் ரொக்கப் பணத்துடன் வெற்றிக் கிண்ணமும், இரண்டாமிடம் பெற்ற அணிக்கு சாஹிரா ஒரியன்ஸ் அணிக்கு 5,000 ரூபாய் ரொக்கப் பணத்துடன் வெற்றிக் கிண்ணமும் வழங்கி வைக்கப்பட்டது.

சகல போட்டிகளுக்கும் நடுவர்களாக முஹம்மது ரிசாத், முஹம்மது பௌசான் ஆகியோர் கடமையாற்றினர்.







விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 12 ஒகஸ்ட் 2021, இல. 8, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.